வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.03.2023 திங்கட்கிழமை | இதழ் : 94 | பக்கங்கள் : 16

## 4 வருடங்கள் எடுக்கும் என்றார்கள் 8 மாதங்களில் நாட்டை மீட்டேன்!

### ஜனாதிபதி ரணில் பெருமிதம்

கொழும்பு, மார்ச் 13

நாட்டை மீட்க நான்கு வருடங்கள் எடுக்கும் என்றார்கள். ஆனால், தான் எட்டு மாதங்களில் மீட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து சிங்கள வார ஏடு ஒன்று தெரிவிக்கையில்-

ஆளும் கட்சி உறுப்பினர் குழுக்களின் கூட்டம் கடந்த வாரம் புதன்கிழமை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் 15



## தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு கடிதம்

### உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி கோரி

கொழும்பு, மார்ச் 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கடிதம் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய சூழலில் தேர்தலுக்கான பணத்தை விடுவிப்பதற்கு தமது அனுமதி மாத்திரம் 15



ஆனையிறவுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்று பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. (செய்தி 2ஆம் பக்கத்தில்)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இலங்கைக்கு முக்கியமானது

### வலியுறுத்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, மார்ச் 13

இலங்கைக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முக்கியமானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். 15



## அதிபர், ஆசிரியர்கள் திட்டமிட்டபடி நாளை மறுதினம் வேலைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 13

நாட்டில் நாளைமறுதினம் புதன்கிழமை ஆசிரியர்கள், அதிபர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று ஆசிரியர் - அதிபர் சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 15

## தேர்தல் ஆணைக்குழு உறுப்புரிமைக்கு நிமால் புஞ்சிஹேவா மீள விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 13

தேர்தல்கள் ஆணைக் குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கான விண் ணப்பம் அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், சட்டத் தரணி நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்தார். தேர்தல் சட்டம் தொடர்பாக தாம் உள்ளிட்ட தற்போதைய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட பல சட்டமூலங்களை 15

## மகிந்த தேசப்பிரிய அரசுடன் நெருக்கம்?

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இப்போது அரசுக்கு மிக நெருக்கமானவராக மாறியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

35 வருடங்களுக்கும் மேலாக தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று தனது பிள்ளைகள் 15

## அமைதியான போராட்டங்களுக்கும் இலங்கையில் கடுமையான பதிலடி!

### மனித உரிமைகள் பேரவை கவலை

ஜெனிவா, மார்ச் 13

நாட்டில் இடம்பெறும் அமைதியான போராட்டங்களுக்கும் "கடுமையான" பதிலடிகள் வழங்கப்படுவது குறித்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான முக்கிய குழு கவலை வெளியிட்டுள்ளது.

அத்துடன் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைகளை இலங்கை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

எந்தவொரு 15

## நிதி அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதில் இல்லை!

### கைவிரிக்கின்றது அரச அச்சகம்

கொழும்பு, மார்ச் 13

இதுவரை நிதி கிடைக்காத காரணத்தினால் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என அரசு அச்சகம் தெரிவித்துள்ளது.

சுமார் 07 இலட்சம் தபால் மூல வாக்குச்சீட்டுகளில் 75 வீத வாக்குச்சீட்டுகளே இதுவரை அச்சிடப் பட்டுள்ளதாக அரச அச்சகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான பணத்தை உரிய முறையில் வழங்குமாறு கோரி நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்துக்கு இது வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் அரச அச்சகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த நிதி உரிய நேரத்தில் கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் 20ஆம் 15

## ஏப்ரலில் எரிபொருள்கள் விலை குறையும்

கொழும்பு, மார்ச் 13

நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள விலை திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்த்துள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியுடன் எரிபொருள் 15

## உதைபந்தாட்ட சம்மேளன பிரதிநிதிகள் மீது யாழ். லீக் கூட்டத்தில் வைத்து தாக்குதல்!

### 5 வருடங்களுக்கு தடை விதிக்கப்பட வாய்ப்பு ஆனல்ட் தரப்பினர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் வைத்து இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனப் பிரதிநிதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் இம்மானுவல் ஆனல்ட் தரப்பினரே இந்த தாக்குதலை மேற்கொண்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 33 கழகங்களின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற 15

# இப்படியும் நடக்கிறது...!

சில நாட்களுக்கு முன்னர் சிவபூமி நிறுவுநர் ஆறு. திருமுருகனார் அதிர்ச்சியளிக்கக்கூடிய செய்தி ஒன்றைச் சொன்னார்.

அடுத்த பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐம்பதுக்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்படுகின்ற அபாயத்தில் இருப்பதாக அவர் சொன்ன செய்தி யாருக்கும் அதிர்ச்சிக்குரியதாக இருந்ததோ தெரியவில்லை. ஆனால் இந்த ஊர்க்குருவிக்கு அது அதிர்ச்சித் தகவல்தான்.

அவர் அவ்வாறு சொன்ன பின்னர் நிலைமை குறித்து பலரிடமும் தகவல்களைப் பெற முயன்றபோது கிடைக்கின்ற செய்திகள் மிகவும் வேதனைக்குரியவை. ஏற்கனவே பல பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. திருமுருகனார் சொல்கின்றதுபோல ஐம்பது பாடசாலைகள் மூடப்படுவதற்கு பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை என்றே கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் செய்தி வெளிவந்த சில நாட்களில் மற்றுமொரு செய்தி வெளிவந்திருந்தது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று திரும்பிய மக்கள் தெரிவித்துள்ள அந்தச் செய்தியும் அதன் படங்களும் சமூகவலைத்தளங்களில் பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கை சைவ மக்களின் மிகத்தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கீரிமலை.

இந்தப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறையில் ஆதிசிவன் கோயில் அமைந்திருந்தது. அந்தச் சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

அந்த இடத்தில் இருந்த பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம், அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரவேலன் கோயில் இவற்றை அங்கு முழுமையாகவே காணவில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை தந்திருக்கின்றது.

சுமார் முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயத்தை தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்திருக்கின்றது இந்த விடயம்.

அதிலும் முக்கியமானது அவை இருந்த இடத்தில் இப்போது கட்டப்பட்டிருப்பது ஜனாதிபதி மாளிகை. மகிந்த ராஜபக்ஷ முதல் பத்துவருட ஆட்சியில், வடக்கிலும் ஒரு ஜனாதிபதி மாளிகையை கட்ட வேண்டும் என்று கட்டிமுடித்திருந்தார்.

ஜனாதிபதிக்கென கண்டியில் இருப்பதுபோல வடக்கிலும் ஒரு மாளிகை கட்டவேண்டும் என்று கட்டியதாக அப்போது அவர் விளக்கமளித்திருந்தமை ஞாபகமிருக்கலாம்.

வடக்கு மாகாணசபைக்கு முதலாவது அரசு அமைந்த பின்னர், அதாவது 'தமிழர் அரசு' அமைந்த பின்னர் அதன் முதலாவது முதல்வராக பதவியில் அமர்ந்த நீதியரசர் விக்னேஸ்வரன் அந்த மாளிகையை சென்று பார்த்ததும், அதன் பின்னர் அந்த மாளிகையை வடக்கு மாகாணசபையிடம் கையளிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

பலகோடி ரூபா செலவில் கட்டப்பட்ட அந்த மாளிகையை பின்னர் தனியாரிடம் கொடுப்பதற்காக அரசாங்கம் கேள்விப்பத்திரம் கோரி விளம்பரமும் செய்திருந்தது. ஆனால் யாரும் அதனை கோரியதாக பின்னர் தெரியவரவில்லை.

இத்தனைக்கும் நமது மாகாண முதல்வர் அந்த மாளிகையை தமது சபையிடம் கையளிக்குமாறு கோரினாரே தவிர, அவர் அதில் இருந்த ஆதிசிவன் கோவில் எங்கே என்றோ, சடையம்மா சமாதி, சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி எங்கே என்றோ கேட்கவில்லை. அதில் இவ்வாறு கோவில்களும் சமாதிகளும் இருந்த சமாச்சாரம் அவருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம்.

அதனால் அவர் அப்போது அதுபற்றி கேட்கவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான்.

ஆனால் நாம் இந்தப் பத்தியில் சொல்ல வருவது, இந்த விவகாரம் சமூக ஊடகங்களில் இன்று பலராலும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே வேளை, ஆறு. திருமுருகனார் போன்றவர்களும் அதுபற்றி குரல்கொடுத்து வருகின்றபோதி லும் இன்று வரை அதனை நமது மக்கள் பிரதிநிதிகள் கண்டு கொண்டதாக தெரியவில்லை.

இந்த விவகாரம் அங்கு நேரடியாக சென்று பார்த்து வந்தவர்களால் பரபரப்பாக சமூக ஊடகங்களில் பேசப்பட்டபோது, பாராளுமன்ற அமர்வுகள் நடந்து கொண்டிருந்தன.

இதுபற்றி பாராளுமன்றத்தில் நமது மக்கள் பிரதிநிதிகள் குரல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அப்படி யாரும் அதைப்பற்றி பேசியதாக தெரியவில்லை.

அவர்கள் கவனம் எல்லாம் இப்போது உள்ளூராட்சி தேர்தலில் மட்டும்தான்.!

**- ஊர்க்குருவி**

# ஆனையிறவில் 27அடி உயர நடராஜர் சிலை பிரதிஷ்டை

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தீர்மானத்துக்கு அமைவாக நடராஜர் பணிக் குழுவினால் ஆனையிறவுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நட ராஜர் சிலை நேற்று முற்பகல் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

ஆனையிறவுப் பகுதியில் பிரதான வர்த்தக மையம், பாரம்பரிய உணவகம், எரிபொருள் நிலையம், நவீன குளியலறை, விளையாட்டு முற்றம், கடற்கரை உல்லாச விடுதி மற்றும் உணவகம், வங்கி வசதிகள் என்பவற்றுடன் கூடிய ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தை நிறுவும் திட்டமிடல் வரைபடத்தின் அடிப்படையில் முதலாம் கட்டப் பணிகள் நிறைவுபெற்று அங்கு நிறுவப்பட்ட சுமார் 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9:30 மணிக்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்து மத சிவாச்சாரியார்கள், பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் மா.வை. சேனாதிராசா, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ-55)







# போயா நாள்களில் வெளிநாட்டவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்ய அனுமதி?

கொழும்பு, மார்ச் 13

போயா தினங்களில் வெளிநாட்டவர்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்ய அனுமதிக்கும் யோசனையை சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே முன்வைத்துள்ளார்.

போயா தினங்களில் வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் மதுபானங்களை விற்பனை செய்யுமாறு இராஜாங்க அமைச்சரின் யோசனை அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"போயா நாட்களில் வெளிநாட்டவர்கள் மதுபானம் வாங்குவதற்கு வழியில்லை," என்று அவர் குழுக் கூட்டத்தில் கூறினார்.

மதுபானக் கடைகள் 24 மணி நேரமும் திறந்திருக்க வேண்டும் என்று திருமதி கமகே முன்மொழிந்தார்.

# லயன்ஸ் பிராந்திய, வலயத் தலைவர்களை வரவேற்கும் நிகழ்வும் கண்ணாடி வழங்கலும்

வடமராட்சி,மார்ச் 13

லயன்ஸ் கழக பிராந்திய மற்றும் வலய தலைவர்களை வரவேற்கும் நிகழ்வும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நேற்று வடமராட்சி கிழக்கு, குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பிராந்திய தலைவர் பி.ஐங்கரன் மற்றும் வலையத் தலைவர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் ஆகியோர் வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் வரவேற்கப்பட்டனர்.



தொடர்ந்து வடமராட்சி கிழக்கு பகுதியில் கண்பார்வை குன்றியவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளும் வழங்ககப்பட்டன.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழக உறுப்பினர்கள், மற்றும் கண்பார்வை குன்றிய கண்ணாடி பெற்றுக்கொள்ள வேண்டியவர்களும் கலந்து கொண்டனர். (அ-02)

ஈழநாடு
Eelanadu
13.03.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## ஜெனிவாவிற்கு செல்லுதல்?

2009இல் யுத்தம் முடிவுற்றதிலிருந்து, ஜெனிவா - என்னும் சொல்லை தமிழ் தேசிய அரசியலிலிருந்து, பிரித்துப்பார்க்க முடியாத ளவிற்கு, ஜெனிவா - அரசியலில் பின்னிப்பிணைந்துவிட்டது. 2009 இல், ஜெனிவாவில், பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்த தாக கூறி, ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தை பாராட்டி, தீர்மானமொன்று, கொண்டுவரப்பட்டது. ஆனால் இரண்டு வருடங்களுக்குள் நிலைமை கள் சடுதியாக மாற்றமடைந்தன. 2012இல், இறுதி யுத்தத்தின் போது, இடம்பெற்ற மனித உரிமைமீறல்களுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்தி, அமெரிக்க அனுசரணையுடன் பிரேரணையொன்று கொண்டுவரைப்பட்டது. இதன் மூலம், இலங்கையை மையப்படுத்தி நிகழும் சர்வதேச அழுத்தங்களுக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. அந்த அடித்தளத்தில்தான், இப்போதும் விடயங்கள் விவாதிக் கப்படுகின்றன, நகர்கின்றன, நகரும்.

இதனைத் தொடர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் ஜெனிவாவுக்கு செல்வதும், தமிழ் தேசிய கட்சிகளின் பிரதான அரசியல் பணியாக மாறியது. அங்கு செல்பவர்கள் உண்மையில் என்ன செய்கின்றனர், அவர்கள் சந்தித்த ராஜதந்திரிகள் யார், அவர்கள் எவ்வாறான விடயங் களை பகிர்ந்துகொண்டனர் - இவ்வாறான விடயங்களை எந்தவொரு அரசியல் கட்சியும் மக்களுக்கு பகிரங்கப்படுத்துவதில்லை. ஜெனிவா வில் சந்திப்புக்கள் இடம்பெற்றதாக கூறி, அறிக்கைகள் வெளிவரும் - ஊடகங்களும் அது தொடர்பில் விசாரணையின்றி, செய்தியிடும்.

ஆனால்,

விடயங்களை ஆழமாக நோக்கினால், கடந்த பதின்மூன்று வருடகால, ஜெனிவா பயணம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஓர் இஞ்சியளவு கூட நகரவில்லை. பிரேரணைகள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரது, அறிக்கை வெளியாகியிருக்கின்றது. அறிக்கையில் காரசாரமான சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால் கொழும்பின் சிங்கள ஆளும் தரப்போ கதைகள் கூறிக் கொண்டு, காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றது. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களில், மைத்திரிபால - ரணில் ஆட்சிக்காலத்தில் மட்டும்தான், பிரச்னைகள் இருக்கின்றன: மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால், 2018, உள்ளூராட்சி தேர்த லில், ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன வெற்றியீட்டியதை தொடந்து, அனைத்தும் பழைய நிலைக்கு சென்றது.

இதுவரையில் தமிழர் விடயத்திற்காக ஜெனிவா சென்று கொண்டி ருந்த தமிழ் தேசிய அரசியல் பரப்பில், தென்னிலங்கை அரசியலை முன்னிறுத்தி, கஜேந்திரகுமார் முதல் முதலாக ஜெனிவாவுக்கு செல்ல வுள்ளதாக தெரிவித்திருக்கின்றார். ரணிலின், ஜனநாயக விரோத செயல்களை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் அவரது பயணம் இடம்பெறவுள்ளது. தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களான எம்.ஏ.சுமந்திரனும், சாணக்கியனும் இலங்கை யில் செய்து கொண்டிருக்கும் ரணில் எதிர்ப்பு பிரசாரங்களை, சர்வ தேச அரங்கிற்கு பொன்னம்பலம் கொண்டு செல்லவுள்ளார். ரணில் எதிர்ப்பு, தமிழ் தேசிய வாக்கு வங்கியரசியலுக்கு பயன்படுமென்னும் பார்வையொன்று தமிழ் தேசியம் பேசும் கட்சிகளிடமுண்டு போல் தெரிகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில், தமிழர்களின் விடயங்களோடு சேர்த்து, தென்னிலங்கை அரசியல் சூழலில் இடம் பெறும் விடயங்களுக்காகவும் ஜெனிவாவில் தமிழர்கள் குரல் கொடுக்கும் புதியதோர் அரசியல் கலாசாரம் ஆரம்பமாகின்றது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். இலங்கையின் ஜனநாய கத்திற்காக, மாநுட விடுதலைக்காக, தமிழர்களும் சிங்களவர்களும் ஜெனிவாவில் ஒன்றிணைவது நாட்டுக்கு நல்லதுதான்.

# நீதிமன்ற சுயாதீனத்துக்கு அழுத்தம்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

பாராளுமன்ற உறுப்பினர்களான பிரேமநாத் சி.தொல வத்த மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோர் பாராளு மன்றத்தில் எழுப்பிய சிறப் புரிமைக் கேள்விகள் நீதித் துறையின் சுயாதீனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்ற சுயா தீனத்தன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படு வதாகவும் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை களை எடுப்பதாகவும் உறுதி யளித்துள்ளது.

நீதிமன்ற சுயாதீனம் என்பது இலங்கை மக்களின் உரிமை எனவும் பிரஜை மற்றும் அரசுக்கு இடையிலான மற்றும் பிரஜைகளுக்கு இடையிலான நீதியை உறுதிப்படுத்துவதற்கு சுதந்திரமான நீதித்துறை அவசியம் என்பதை அனைத்து அரச நிறுவனங் களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# ஜூனில் பஸ் கட்டணம் குறைப்பு?

கொழும்பு, மார்ச் 13

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வரும் நிலை யில், எரிபொருள் விலை குறைக்கப்பட்டால், ஜூன் மாதம் இடம்பெறவுள்ள பஸ் கட்டணத் திருத்தத்தில், கட்டணக் குறைப்பு இடம் பெறக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அந்த சங்கத் தின் தலைவர் கெமுனு விஜே ரத்ன, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலேயே, தேசிய பஸ் கட்டணச் சூத்திரம் உள்ளதாக குறிப்பிட்டார்.

டொலரின் பெறுமதி மற் றும் பணவீக்கத்தின் அடிப் படையில், இந்த நிலைமை அவதானிக்கப்படுகிறது.

இதற்கமைய, பணவீக்கம் குறைவடையுமாயின், பஸ் கட்டணமும் நிச்சயமாக குறைவடையும் என்ற எண் ணக்கரு உள்ளது.

விலை தளம்பல் குறித்து, நாளாந்தம் ஆய்வு செய்து தரவுகளைப் பெற்றுக்கொள் ளுமாறு தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தப்பட்டுள் ள தாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# அரச மருத்துவ அதிகாரிகள் இன்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, மார்ச் 13

அண்மைய வரி திருத்தத்திற்கு எதிராக நான்கு மாகாணங்களில் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

மேற்கு, மத்திய, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்டபடி இன்று வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

இதேவேளை, ஏனைய பல மாகாணங் களின் உறுப்பினர்கள் நாளை செவ்வாய்க் கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேலைநிறுத்தம் இருந்தபோதிலும், அவசர சேவைகள் பாதிக்கப்படாது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது. மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகள், தேசிய புற்றுநோய் நிறுவனம், சிறுநீரக சிகிச்சை பிரிவுகள், தேசிய மனநல நிறுவனம் மற்றும் இராணுவ மருத்துவமனைகள் ஆகியவற்றில் வேலை நிறுத்தம் பாதிக்கப்படாது என அரச வைத் திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே குறிப்பிட்டார்.

தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால், புதன்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபடவுள்ளதாக வைத்தியர் ஹரித அலுத்கே கூறினார். (அ)

# அடிக்கடி வீதிகளில் கொட்டப்படும் மணல்

வடமராட்சி, மார்ச்13


வடமராட்சி கிழக்கு மருதங்கேணி - பருத்தித் துறை வீதியில் கடந்த சில நாட்களாக குடத்தனைச் சந் திக்கும் வல்லிபுரம் மாவடிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் மணல் இரவு வேளைகளில் வீதியில் கொட் டப்பட்டு காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்பட்டுள்ள துடன் இரவு நேரத்தில் பயணிகள் பல அசௌகரி யங்களுக்கும் உள்ளாகியுள் ளனர்.

கடந்த பத்து நாட்களுக் குள் இவ்வாறு மூன்று தட வைகள் இடம் பெற்றுள்ளன.

இதில் ஒரு நாள் மட்டும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதியில் கொட்டப் பட்டு காணப்பட்ட மணல் மண்ணைச் சேகரித்து தனது வாகனத்தில் ஏற்றிச் சென் றதை அவதானிக்க முடிந் தது.

மிகுதி நாட்களில் வீதி யில் மணல் கொட்டப்பட்ட மறுநாள் இரவே காணாமல் போகின்றன. (அ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



**மார்ச் - 13 சனிக்கிழமை**
**சுபகிருது வருடம் - மாசி 29**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : சஷ்டி**




**மேடம்**

நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவர். அதனால் சங்கடம் தோன்றும்.

**இடபம்**

சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்னை உங்கள் விருப்பப்படி முடிவிற்கு வரும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும் நாள். பழைய பிரச்னை முடிவிற்கு வரும்.

**மிதுனம்**

எதிர்பார்த்த வருமானம் வரும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட சிக்கல் தீரும். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விருத்தி செய்வீர். வருமானம் அதிகரிக்கும். எண்ணம் நிறைவேறும்.

**கடகம்**

உங்கள் செயல்களில் சில தடை ஏற்படும். சட்டத்திற்கு புறம்பான செயல் வேண்டாம். குருவருளால் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஒரு செயலில் போராடி வெல்வீர்கள். லாபம் உண்டு.

**சிம்மம்**

துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் செயலில் லாபம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். விமர்சனங்களை ஒதுக்கி வைத்து செயல்படுவீர். நினைத்ததை சாதிக்கும் நாள்.

**கன்னி**

வரன் தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் வரும் நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் வரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை அகலும்.

**துலாம்**

உங்கள் கவனக்குறைவால் ஒரு முயற்சி நிறைவேறாமல் போகும். நிதானம் தேவை. செயல்களில் தடுமாற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். எண்ணம் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**

வரவுகள் அதிகரிக்கும் என்றாலும் திடீர் செலவுகளால் சங்கடம் அடைவீர். உழைப்பின் வழியே உங்கள் செயல்களில் சாதகமான நிலையைக் காண்பீர். வாகன வகையில் செலவு உண்டாகும்.

**தனுசு**

எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். நிதிநிலை உயரும். வியாபாரத்தை விரிவு செய்வீர். உங்கள் முயற்சிக்கு பணியாளர் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வருவாய் வரும்.

**மகரம்**

வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு நண்பர்கள் வழியே தகவல் வரும். தொழிலை விரிவு செய்வதற்காக எதிர்பார்த்த தொகை உங்கள் கைக்கு வரும். எதிர்பார்த்ததை அடைவீர். நிதி உயரும்.

**கும்பம்**

புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். செயல்களில் சிரமம் ஏற்பட்டாலும் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவேண்டிய பணம் இன்று வரும்.

**மீனம்**

புதிய முயற்சி வேண்டாம். செயல் தாமதமாவதால் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பணிகளில் கவனம் தேவை. கவனக்குறைவு சங்கடத்தை உண்டாகும்.

# அரசியலில் இருந்து ஏன் விலகினேன்?

## ரஜினிகாந்த் விளக்கம்



சென்னை, மார்ச் 13

சென்னை ராயப்பேட்டை மியூசிக் அகாடமியில் நடைபெற்ற தனியார் அறக்கட்டளையின் 25ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் நடிகர் ரஜினிகாந்த், முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ரஜினிகாந்த் பேசியதாவது - நான் அரசியல் பணியில் ஈடுபடும்போது கொரோனா இரண்டாவது அலை தொடங்கிவிட்டது. நான் அந்தச் சமயத்தில் வெளியே சென்றால் உடல்நிலை பாதிக்கப்படும் என்று மருத்துவர் கூறினார். அப்படி செல்வதாக இருந்தால் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது உள்ளிட்டவற்றை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார். தேர்தல் பிரசாரத்திற்காக நான் சென்றால் முதலில் என் முகக் கவசத்தை கழற்ற வேண்டியிருக்கும். அதேபோல் சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதும் இயலாத காரியம். இதை எப்படி மக்களிடம் சொல்வது என்ற யோசனையில் இருந்தேன். அப்போது என்னுடைய மருத்துவர், 'யார் என்ன சொன்னாலும் பரவாயில்லை, அவர்களிடம் நான் கூறுகிறேன். ரசிகர்களிடம் நான் விளக்கம் அளிக்கிறேன்' என்று கூறி எனக்கு துணையாக நின்றார். அதன்பிறகு தான் அரசியலில் இருந்து விலகுவதாக நான் அறிவித்தேன் என தெரிவித்தார். (அ)

# எடப்பாடி பழனிசாமி மீது வழக்கு

சென்னை, மார்ச் 13

அதிமுக இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது அவனியாபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மதுரை விமான நிலையத்தில் அ.ம.மு.க நிர்வாகி ராஜேஷ்வரன் தாக்கப்பட்டதாக அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் எடப்பாடி பழனிசாமி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



மதுரை விமான நிலையத்தில் பஸ்ஸில் சென்றபோது எடப்பாடி பழனிசாமியை அ.ம.மு.க பிரமுகர் ராஜேஷ்வரன் அவதூறாக பேசி பேஸ்புக்கில் நேரலை செய்துள்ளார். அதனை பார்த்த எடப்பாடி பழனிசாமியின் உதவியாளர் செல்போனை பிடுங்கியதாக கூறப்படுகிறது.

சமூக வலைத்தளத்தில் எடப்பாடி பழனிசாமி குறித்து விமர்சனம் செய்ததாக அ.ம.மு.க நிர்வாகி ராஜேஷ்வரன் மீதும் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மேலும் முன்னாள் அமைச்சர்கள் மணிகண்டன் உள்ளிட்ட 5 பேர் மீதும் 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# சாதி, மதத்தை பயன்படுத்தி குழப்பம் ஏற்படுத்த முயற்சி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 13

சாதி, மதத்தை பயன்படுத்தி தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்வதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு நாள் பயணமாக நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து மு.க.ஸ்டாலின் கோவை சின்னியம்பாளையம் சென்றார். அங்கு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாற்றுக்கட்சியினர் 4 ஆயிரம் பேர் தி.மு.க.வில் இணையும் விழா நடந்தது. விழாவில் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மாற்றுக் கட்சியினர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக்கொண்டனர்.



இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் உரையாற்றுகையில் - இந்த நாட்டில் நம்மைப்போல் (தி.மு.க.) வெற்றி பெற்றிருக்கக் கூடிய கட்சியும் கிடையாது. நம்மைப்போல் தோற்றிருக்கக் கூடிய கட்சியும் கிடையாது. இரண்டிலும் நமக்குதான் பெருமை. வெற்றியிலும் சரி, தோல்வியிலும் சரி இரண்டிலும் நமக்குதான் பெருமை. தி.மு.க. வெற்றி, தோல்வியை பற்றி கவலைப்படாமல் பாடுபடக்கூடிய கட்சி. அந்த தி.மு.க. 6ஆவது முறையாக மக்களுடைய அன்பை, ஆதரவை பெற்று ஆட்சியில் இருக்கிறது. எங்கள் மீது, இந்த இயக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து ஆதரவு தந்திருக்கும் மக்களுக்கு தேர்தல் நேரத்தில் அளித்திருக்கும் உறுதி மொழிகள் காப்பாற்றப்பட்டு கொண்டிருக்கிறதா? இல்லையா?.

தேர்தல் நேரத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதெல்லாம் செய்வோம் என்று சொன்னோம். கலைஞர் கருணாநிதி எப்படி தேர்தல் நேரத்தில், தேர்தல் அறிக்கையை வெளியிடுகிற போது திருக்குறள் போன்று 2 வரிகளை சொல்வார். 'சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம்' என்று. 6ஆவது முறையாக கலைஞர் கருணாநிதியுடைய வழியில் நடைபெறக் கூடிய திராவிட மாடல் ஆட்சி, சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சியாக பீடு நடை போட்டுக்கொண்டிருக்கிறது.

பஸ்சில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம், இது சொன்னது. கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்டு இருக்கக் கூடிய மக்களுக்காக ஆட்சிக்கு வந்தவுடன் நாங்கள் ரூ.4 ஆயிரம் தருவோம் என்றோம், இது சொன்னது. அரசு பள்ளிகளில் படித்து முடித்து கல்லூரிக்கு செல்லக்கூடிய மாணவிகளுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கப்படும், அதற்காக புதுமைப்பெண் என்று ஒரு திட்டம். இது சொல்லாதது. இப்படி, சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சி நடக்கிறதா? இல்லையா?.

இன்றைக்கு மதத்தை பயன்படுத்தி, சாதியை பயன்படுத்தி கலவரத்தை ஏற்படுத்தலாம், குழப்பத்தை ஏற்படுத்தலாம். அதன் மூலமாக இந்த ஆட்சியை வீழ்த்திவிடலாம் என்றெல்லாம் கனவு கண்டு அந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டி ருக்கிறார்கள். எனவே, அதற்கெல்லாம் செவி சாய்க்காமல், எதை பற்றியும் கவலைப்படாமல் நம்முடைய இலக்கு என்பது பாராளுமன்ற தேர்தல்தான். 40-க்கு 40 கடந்த முறை பாராளுமன்ற தேர்தலில் ஒரே ஒரு இடத்தை இழந்தோம். வரவிருக்கக்கூடிய பாராளுமன்ற தேர்தலில் அந்த இடத்தையும் இழக்கக்கூடாது. புதுவையையும் சேர்த்து 40-க்கு 40. நாடும் நமதே, நாளையும் நமதே. ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மதசார்பற்ற கூட்டணியின் வெற்றி மட்டுமல்ல, இந்தியா முழுமையும் இருக்கக் கூடிய அனைத்து மாநிலங்களிலும் நாம் மிகப்பெரிய வெற்றியை பெறுவதற்கான அந்த முயற்சியில் முழுமையாக ஈடுபடப்போகிறோம்-என்றார்.

# 10 புதிய அமைச்சர்கள் இந்த மாதம் நியமனம்

## எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இந்த மாதத்துக்குள் 10 புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- விரைவில் எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும். இப்போது இருக்கும் அமைச்சரவையைத் திருத்தி நல்லதோர் அமைச்சரவையை அமைக்கும் தேவை ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு.

இப்போது இருக்கின்ற அமைச்சரவை அங்கும் இங்குமாக எடுத்து நிரப்பியது. என்னை அமைச்சராக நியமித்தால் எடுத்து வேலை செய்வேன். அபிவிருத்தி செய்யக்கூடிய



அமைச்சாக இருந்தால் நல்லது. அப்படிப்பட்ட அமைச்சு மீது தான் எனக்கு விருப்பம் அதிகம். 10 புதிய அமைச்சர்கள் இந்த மாதம் நியமிக்கப்படுவார்கள்" -என்றார். (அ)

# பிரதமருக்கு எதிராக வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, மார்ச் 13

**பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரச அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்பதை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன விடுத்திருந்த சுற்றறிக்கை அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அமைச்சரவை எடுத்த முடிவின் பிரகாரமே இந்த அறிவிப்பு வெளியானது எனவும் கூறப்பட்டது.

பின்னர் அமைச்சரவை அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை எனக் கூறப்பட்டது. சுற்றறிக்கையும் மீளப்பெறப்பட்டது.

எனவே, தேர்தலை குழப்புவதற்கு தனது செயலாளரை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக செயற்படும் பிரதமருக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் கலந்துரையாடிவருகின்றார் என தெரியவருகின்றது. (அ)

# களைகட்டுகின்றது முரல் மீன் திருவிழா

## சுற்றுலா ரீதியாக பிரபலமாகும் மாதகல் கடற்கரை!

யாழ்ப்பாணம், மார்ச் 13

மாதகல் பகுதியில் விசேட அம்சமாக உள்ள முரல் மீன்படுகை அதிகரித்த காலமாக இம்மாதம் உள்ள நிலையில் மீன் விற்பனை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் மாதகல் மேற்கு கடற்கரை இரவு நேரங்களில் விழாக்கோலம் பூண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதகல் கடற்பரப்பில் பிரிக்கப்படுகின்ற முரல் மீன் தனித்து வமானதும் சுவை வாய்ந்ததுமாக இருப்பதாகவும், அதிகளவான வோர் குறித்த கடற்பரப்பிற்கு தமது குடும்பங்களுடனும் நண்பர்களுடனும் சென்று படகுகளில் பிடித்து வரப்படும் மீனை கரையில் உடனடியாகவே கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால், மீனவர்கள் மீண்டும் உடனடியாக முரல் மீன் பிடிக்கச் கடலுக்குச் செல்வதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக ஒரு மீன் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.



இந்த நிலையில் வடமாகாண சுற்றுலாப் பணியகம் இக்காலப் பகுதியினை மாதகல் பகுதியை சுற்றுலாவுக்கு உகந்த காலமாக அடையாளப்படுத்தியுள்ளது.

இதுதவிர, குறித்த பகுதியில் சுண்டல் உட்பட்ட பல உணவு வகைகளும் பிரதேசவாசிகளால் விற்பனை செய்யப்படுகின்றன. (அ)

# இந்திய உதவித்தொகையின் கீழ் மாணவர்களுக்கு பாடப்புத்தகம்

கொழும்பு, மார்ச் 13

இந்த வருடத்திற்கு தேவையான பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக இந்திய உதவியின் கீழ் இலங்கைக்கு கிடைத்த பணத்தில் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டுக்கு தேவையான மொத்த பாடப்புத்தகங்களில் பாதியை அச்சிட முடிந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு, நிதி நெருக்கடியை எதிர்கொள்ள இந்தியா ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு உதவித் தொகையாக வழங்கியது.

உணவு, எரிபொருள், மருந்துகள், தொழிற்சாலை மூலப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு இந்தியா கடந்த மார்ச் மாதம் இந்த உதவியை வழங்கியது.

பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான அச்சு காகிதம் மற்றும் மூலப்பொருட்களை பெறுவதற்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவித் தொகையில் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் உள்ள 40 இலட்சம் பாடசாலை மாணவர்களில் சுமார் 45 வீதமான மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு உதவித் தொகை உதவியுள்ளது. (அ)

# இலங்கைக்கு படையெடுக்கும் வட இந்தியத் தொழிலதிபர்கள்

கொழும்பு, மார்ச் 13

சுமார் 92 பேர் அடங்கிய வட இந்திய தொழிலதிபர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதியன்று இந்திய நகையக சம்மேளனத் தலைவர் சுலானி தலைமையில் இந்தக் குழுவினர் இலங்கை வரவுள்ளனர்.

முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் இவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதியன்று இலங்கையின் தொழிலதிபர்களைச் சந்திக்கவுள்ளனர்.

இதில் இலங்கைக்கான இந்திய தூதுவரும் பங்கேற்கவுள்ளார்.

இந்திய தொழிலதிபர்களின் வருகை மற்றும் சந்திப்பு ஏற்பாடுகளை இலங்கை - இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் மேற்கொண்டுள்ளார். (அ)

# யூரியா விலையை குறைக்க தீர்மானம்

கொழும்பு, மார்ச் 13

யூரியா உரத்தின் விலை இவ்வருடம் மேலும் குறைக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உயர் பருவத்தில் 10,000 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வந்த யூரியா உர மூட்டை ஒன்றின் விலை 7,500-9,000 ரூபா வரை குறைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

சீன அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட எரிபொருளை வழங்கும் நிகழ்வை அவதானித்தபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அகுனகொலபலஸ்ஸ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெறுவதற்காக திரண்டிருந்த விவசாயிகளை அமைச்சர் சந்தித்து அவர்களின் விவசாய நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஒரு ஹெக்ரேயருக்கு 55 கிலோ ரி.எஸ்.பி அல்லது மண் உரம் வழங்க விவசாயத்துறை பரிந்துரைத்துள்ளதாகவும், அதே அளவு உரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் பண்டி உரத்தின் விலை உயர்மட்டத்தில் உள்ளதால், அந்த உரத்தின் விலையை 10,000 ரூபாவாக குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# நபரொருவர் தாக்கப்பட்டு படுகொலை; இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 13

கண்டி பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இல்லகொல்ல பிரதேசத்தில், நபரொருவர் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை பிரதேசத்தை சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பேராதனை பிரதேசத்தை சேர்ந்த 39 மற்றும் 52 வயதுகளையுடைய இருவர் குறித்த நபர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-கே)

# ரயிலில் மோதுண்டு பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 13

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனேமுல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புகையிரத கடவை மூடப்பட்டிருந்த நிலையில், அவ்வழியாக பயணித்த குறித்த பெண்ணின் சேலை ரயிலில் சிக்கியுள்ள நிலையிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-கே)

# நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கச் சிலர் முயற்சி!

## டீ.வீரதுங்க எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து மக்களின் வாழ்க்கையை கேள்விக்கு உட்படுத்துவதற்கு யாரேனும் முயற்சிப்பார்களாயின் அதனை தடுத்து நிறுத்துவதற்கான பொறுப்பு அரசாங்கத்துக்கு உரியது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டு இருந்த சந்தர்ப்பத்திலேயே நாட்டின் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றார்.

இதற்கமைவாக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக தற்போதைய ஜனாதிபதியுடன் நாமும் கைக்கோர்த்துள்ளோம். ஒன்றிணைந்து பயணித்து வருகின்றோம்.

இந்த ஒன்றிணைந்த பயணித்தில் நாட்டில் எரிவாயு, எரிபொருளுக்கான வரிசையை இல்லாமல் செய்ய முடிந்துள்ளது. நாட்டின் பணவீக்கம் குறைவடைந்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியின் வருகை அதிகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்வதில் இதுவரை இருந்துவந்த இடையூறுகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் சிறந்த மட்டத்தில் காணப்படுமாயின் தேர்தலை எதிர்கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை. தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவையும் இல்லை.

நாட்டில் பிரச்னைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் தேர்தலை ஒத்திவைத்த தரப்பினர் இன்று தேர்தலுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி சிறந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தை சீர்குலைக்க வேண்டும் என்பதே சிலரது தேவையாக உள்ளது. யதார்த்த நிலைமையை சீர்குலைத்தால் மட்டுமே அவ்வாறானவர்களால் அரசியல் இலாபத்தை அடைய முடியும்.

இதனை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

நாடு யதார்த்த நிலைமைக்கு திரும்புவதை சீர்குலைப்பதற்காகவே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

எனினும், நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து மக்களின் வாழ்க்கையை கேள்விக்கு உட்படுத்துவதற்கு யாரேனும் முயற்சிப்பார்களாயின் அதனை அரசாங்கம் தடுத்து நிறுத்தும் - என்றார். (அ-கே)



# தேர்தலை எதிர்கொள்ள மொட்டு கட்சி அஞ்சாது

## சமன்பிரிய ஹேரத் எம்.பி

கொழும்பு, மார்ச் 13

**ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் கட்சி என்ற முறையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவானது ஒரு போதும் தேர்தலை எதிர்கொள்வற்கு அஞ்சியதில்லை என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக எப்போதும் முன்னிற்கும் சக்தியாக பொதுஜன பெரமுனவை நாம் அடையாளப்படுத்த முடியும்.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்காக நாம் பாரிய போராட்டங்களை மேற்கொண்டோம்.

வெவ்வேறான சந்தர்ப்பங்களில் வீதிகளில் இறங்கி போராடவும் செய்தோம்.

மிகவும் சவாலுக்கு மத்தியில் நாட்டை பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதாரப் பிரச்சினையை திட்டமிட்டு எதிர்கொண்டு அந்த சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இன்று அதில் அவர் வெற்றியும் அடைந்துள்ளார்.

எமது அரசாங்கத்தில் நாட்டின் பொருளாதார பிரச்னைக்கு நிச்சியம் தீர்வு கிடைக்கும் என்பதை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நன்கு தெரியும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை மிகவும் வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

எனினும் நாட்டின் அடிப்படை பிரச்சினை என்ன என்பதை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் பட்டினியின் வாழ்வதே இன்றை பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு உரிய காலத்தில் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். மக்களின் வாழ்வாதார உரிமையை நிலைநாட்டுவது அதேபோன்று மக்களை வாழ வைப்பதற்கு அரசாங்கம் என்ற முறையில் நாம் பொறுப்புடையவர்களாக இருக்கின்றோம் - என்றார். (அ)

# இலங்கை இளைஞர் விசாரணையின்போது உயிரை மாய்த்துக்கொள்வதற்கு முயற்சி!

சென்னை, மார்ச் 13

தமிழகத்தில் உள்ள தாபதி புனர்வாழ்வு மையத்தில் 20 வய தான இலங்கை இளைஞர் ஒருவர், காவல்துறை விசாரணையின் போது, தமது உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

எட்டயபுரம் காவல் நிலையத்தில், நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொழிலில் ஓவியரான குறித்த இலங்கையர், 11ஆம் வகுப்பு படிக்கும் சிறுமியை பழனியில் உள்ள ஆலயம் ஒன்றில் வைத்து திருமணம் செய்து கொண்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே காவல் துறை விசாரணை இடம்பெற்றது.

இதன்போதே இலங்கை ஏதிலி, உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதனையடுத்து அவரை தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி வைத்தியசாலைக்கு காவல்துறையினர் அனுப்பி வைத்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# முட்டை இறக்குமதி தாமதம் இந்தியா செல்லும் அதிகாரி

கொழும்பு, மார்ச் 13

இந்தியாவில் இருந்து முட்டை இறக்கு மதி செய்வதில் ஏற்படும் தாமதம் குறித்து ஆய்வு செய்ய அதிகாரி ஒருவர் இந்தியா செல்ல உள்ளதாக வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர் இந்த விடயமாக இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்தியாவில் இருந்து 02 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன.

எனினும், இந்திய அதிகாரிகள் இன்னும் தரச்சான்றிதழை வழங்காததால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கை இராணுவ அதிகாரிகள் 13 பேர் வெளிநாடு சென்று நாடு திரும்பவில்லை!

கொழும்பு, மார்ச் 13

பிரிகேடியர் உட்பட 13 இலங்கை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்று நாடு திரும்பவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில இணையத்தளம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து, கடவுச்சீட்டைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு இலங்கை இராணுவ அதிகாரிகள், அவர்களின் படைப்பிரிவுத் தளபதிகளிடம் அனுமதி பெற வேண்டும் என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கும் விளக்கமளித்துள்ளது.

இராணுவ சேவையை விட்டு வெளியேறி, திறமையான அதிகாரிகள் உட்பட பெரும்பாலான அதிகாரிகள் வெளிநாடு செல்ல ஆரம்பித்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கலாசார மையத்தை திறக்க சென்ற அமைச்சர்களுக்கு மக்கள் எதிர்ப்பு!

கொழும்பு, மார்ச் 13

குருநாகல், பமுனகொடுவ பிரதேசத்தில் கலாசார நிலையமொன்றைத் திறந்து வைக்கச் சென்ற அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக அந்த பகுதி சில மக்கள் தங்களது அதிருப்தியை வெளியிட்டனர்.

அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் ஆகியோர் கலாசார நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி அமைச்சர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இதன்போது அங்கிருந்த மக்கள், குறித்த கலாசார நிலையத்தை பல அமைச்சர்கள் பல தடவைகள் திறந்து வைத்துள்ளதாக தெரிவித்தனர்.

இந்தநிலையில் அந்த இடத்தில் ஏராளமான பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். (அ)

# தேயிலை விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 13

தேசிய தேயிலை விலை கடந்த ஜனவரி மாதத்துடன் பெப்ரவரி மாதத்தில் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை 28 ரூபா 56 சதத்தினால் வீழ்ச்சியை பதிவு செய்து சராசரியாக ஆயிரத்து 438 ரூபா 20 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டதாக தரகர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும் கடந்த 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேயிலை விலை உயர்வு தன்மையை காட்டியுள்ளது.

இதேவேளை, ரூபாவின் மதிப்பேற்றம் காரணமாக, தேயிலை சந்தையில் வீழ்ச்சி ஏற்படுவதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் முன்னதாக தெரிவித்திருந்தது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுப்பெற்று வருவதால், ஒட்டுமொத்த ஏற்றுமதித் துறையும் பாதிக்கப்படுகிறது.

இந்த நிலைமையானது, தேயிலை சந்தைக்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பச்சைக் கொழுந்துக்காக செலுத் தப்படும் மேலதிக கொடுப்பனவை இடைநிறுத்த வேண்டியேற்படும்.

அதேநேரம், மின் கட்டணம் அதிகரித்துள்ளமையால், தொழிற்சாலை செலவுகளும் அதிகரித்துள்ளதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# அத்தியாவசிய சேவை ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தால் சிறை!

## மிரட்டுகின்றார் வஜிர அபேவர்த்தன

கொழும்பு, மார்ச் 13

அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் குற்றமிழைக்கும் ஒவ்வொரு நபரின் அசையும் அல்லது அசையா சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.



அத்தியாவசியப் பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்து, விசாரணையின் மூலம் தண்டிக்கப்பட்ட ஒரு நபருக்கு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் கடூழிய சிறைத்தண்டனை அல்லது 2000 ரூபாய்க்குக் குறையாத ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் அபராதம் ஆகிய இரண்டும் விதிக்கப்படவேண்டும் எனச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக வஜிர அபேவர்தன கூறினார்.

குறித்த குற்றத்தை செய்பவர் பணிபுரியும் உரிமையை இழக்க நேரிடும் எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் பிரிவு 6 மற்றும் 7ஐ மேற்கோள் காட்டி வஜிர அபேவர்தன குறிப்பிடுகையில், “இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக ஒரு நபருக்கு எதிராக ஒரு குற்றவியல் வழக்கு தொடங்கப்பட்டால், அவர் ஒரு தொழிற்சங்கத்தால் தொடங்கப்பட்ட வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதில் இணைந்தார் என்பது ஒரு மன்னிப்பிற்கான காரணமாக அமையாது.

தொழிற்சங்கச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவை எதுவாக இருந்தாலும், அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் விதிகளுக்கும் அத்தகைய பிற எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பிற முரண்பாடுகள் ஏற்பட்டால், அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் விதிகள் மேலோங்கும்.

துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டுள்ளார்.

சுங்கச் சட்டத்தின் நோக்கங்களுக்காக சாலைகள், பாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் ரயில்கள், வான்வழி போக்குவரத்து சேவைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசிய சேவைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)



# திருட்டுத்தனமாக பசு மாடுகளை ஏற்றிச்சென்ற மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 13

இரவு நேரம் திருட்டுத்தனமாக பசு மாடுகளை இறைச்சிக்காக எடுத்துச் சென்ற மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நயனஜித் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு 7.30 மணி அளவில் வளலாய் விமான நிலைய வீதியில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போது மருதடி சந்திப் பகுதியில் வைத்து வாகனம் ஒன்று மறித்து சோதனையிடப்பட்டது.

இதன்போது ஐந்து மாடுகளை சிறிய வாகனத்தில் மிகவும் சித்திரவதை செய்து இறைச்சிக்காக எடுத்து சென்றமை தெரிய வந்துள்ளது .

கைது செய்யப்பட்டவர்களில் கொழும்பு பகுதியைச் சேர்ந்த இரண்டு பேரும் அச்சுவேலி தோப்புப் பகுதியை சேர்ந்த ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாடுகள் மிகவும் சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

அண்மைக்காலமாக வலிகாமம் பகுதிகளில் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கையில் பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ, அப்துல்லா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான கமகே, திலகரட்ன, அத்தநாயக்க ஆகியோர் ஈடுபட்டனர். (அ)

# தேயிலை,மரக்கறி பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு இயற்கை உரம்

கொழும்பு, மார்ச் 13

நெற்பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படும் உரம் விவசாயிகளுக்குத் தேவையில்லை என்றால், தேயிலை மற்றும் மரக்கறி பயிர்ச்செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள விவசாய சங்கங்களுடன் அண்மையில் விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் குறித்து கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்கள் காரணமாக இயற்கை உரங்கள் தொடர்பாக நெற்பயிர்ச் செய்கை செய்யும் விவசாயிகளுக்கு நம்பிக்கை இல்லை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்முறை இயற்கை உரத்தை விவசாயிகள் மறுத்தால், தேயிலை மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு வழங்குமாறு விவசாய அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# பாலம் திடீரென உடைந்ததால் ஆற்றுக்குள் விழுந்தது ஓட்டோ!

கொழும்பு, மார்ச் 13

இமதுவ வத்த கிரிதடுபே பாலத்தில் ஓட்டோ ஒன்று பயணித்துக் கொண்டிருந்தபோது, பாலம் உடைந்து ஆற்றில் விழுந்துள்ளது.

பாலம் இடிந்து விழும் நேரத்தில் பெண் ஒருவர் தனது இரண்டு குழந்தைகளுடன் ஓட்டோவில் பயணித்தார் எனவும், சாரதி உட்பட அனைவரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.



இந்த பாலம் இடிந்து விழுந்ததால் சுமார் 100 வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாற்றுப் பாதை இல்லாததால் கிரிதடுபே கிராம மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த இடத்தில் அரசின் ஒரு லட்சம் பாலம் திட்டத்தில் பாலம் கட்ட திட்டமிடப்பட்டு இதுவரை அது அமைக்கப்படவில்லை.

பல தசாப்தங்களாக கிராம மக்கள் பயன்படுத்திய பலகைகளால் கட்டப்பட்ட இந்த பாலத்தை நேற்று கிராம மக்களே சீரமைக்கும் பணியை தொடங்கினர். (அ)





# முத்தமிழ் கிராமத்தில் டெங்கு சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒழுங்கமைப்பில் நேற்று ஞாயிற்றுகிழமை காலை 7.00 மணியளவில் முத்தமிழ் கிராமத்தில் டெங்கு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுமக்களுடன் இணைந்து பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சுகாதார பிரிவினர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வு யாழ் மாநகர பதில் முதல்வர் ஈசன், மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பாலமுரளி, முத்தமிழ் கிராம பொது சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவன் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகளின் பிரசன்னத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொதுமக்கள் ஆர்வத்துடன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு டெங்கு பரவும் வாய்ப்புள்ள இடங்களை துப்புரவு செய்ததுடன், கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு மாநகர கழிவகற்றும் பிரிவினர் மூலம் உடனடியாக அகற்றப்பட்டன.

அத்துடன் மாநகரசபை அறிவித்தல் வாகனத்தின் மூலம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலீப் லியனகே, யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி இருந்தனர். (அ)

# அரசியல் உட்பட சகல உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்படவேண்டும்

## இராகலையில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 13

அரசியல் உட்பட அனைத்து விதமான உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா - இராகலையில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. கண்டி சமூக அபிவிருத்தி ஸ்தாபனம், ராகலை நகர் பெண் சிவில் அமைப்புகள் மற்றும் பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந் தனர்.

இராகலை நடுக்கணக்கு தோட்ட பிரிவிலிருந்து ஆரம்பமான பேரணி, ராகலை நகர் வரை வந்து, அங்கு கூட்டம் நடத்தப்பட்டது. தமது கோரிக்கைகளை முன்வைத்து பதாதைகளை தாங்கியபடியும், கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியில் பங்கேற்றோர் நகரை நோக்கி வந்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் சார் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இதன்போது விசேடமாக வலியுறுத்தப்பட்டது.

அதேபோல பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

வீட்டுப்பணிப்பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகள் அவசியம் என சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# இலங்கை அகதிகள் போர்வையில் இந்தியாவுக்குள் நுழையும் ‘தேடப்படும் சந்தேக நபர்கள்’

பிரபுராவ் ஆனந்தன்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் ஏராளமான இலங்கை தமிழர்கள் உள்ளிட்ட இலங்கையர்கள், இந்தியாவில் அடைக்கலம் கோரி தனுஷ் கோடி கடல் வழியாக தமிழ்நாட்டுக்குள் வந்துள்ளனர். அவர்கள் மண்டபம் இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அடைக்கலம் தேடி வந்தவர்களை இந்திய அரசு அகதியாக கருதாததால், மனிதாபிமான அடிப்படையில் அவர்களை அகதிகள் முகாமில் தங்க வைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கையில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடக்கூடிய சிலர், இலங்கை, இந்திய சர்வதேச கடல் வழியாக அகதிகள் போர்வையில் தமிழகத்தில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இவ்வாறு சட்ட விரோதமாக வருபவர்களை உடனடியாக கண்டறிய முடியாமல் இந்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி கொழும்புவை சேர்ந்த சீனிவாசன் என்பவர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு வந்து அங்குள்ள அதிகாரிகளிடம் தான் இன்று காலை யாழ்ப்பாணத்தில் இருந்து அகதியாக படகில் வந்ததாக தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த வாக்குமூலம் முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் சந்தேகமடைந்த விசாரணை அதிகாரிகள் விசாரணையை தீவிர படுத்திய போது, அவர் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விமானம் மூலம் திருச்சிக்கு வந்து ஈரோடு பவானி சாகர் முகாமில் அவரது அண்ணன் வீட்டில் தங்கி விசா காலம் முடிந்தும் இலங்கைக்கு திரும்பி செல்ல முடியாமல் சட்டவிரோதமாக தமிழகத்தில் தங்கி இருக்கிறார் என்பது தெரிய வந்தது.




அவருக்கு சிலர் அளித்த யோசனையின் அடிப்படையில் பொருளாதார நெருக்கடி காரணமாக படகில் தனுஷ் கோடி வந்து பின் அகதியாக பதிவு செய்ய மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு வந்ததாக ஒப்புக் கொண்டதையடுத்து அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இரவு இரண்டு மாத கைக்குழந்தையுடன் புகலிடம் தேடி அகதியாக தமிழகம் வந்த எட்டு பேர் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

அகதியாக வந்த கிளிநொச்சியை சேர்ந்த சந்திரகுமார் என்பவர், கிளிநொச்சியில் உள்ள நகை கடை ஒன்றை உடைத்து நகைகளை கொள்ளையடித்து, தொழிலதிபர் ஒருவரை கடத்தி மிரட்டி அவரிடம் பணம் பறித்த வழக்குகளில் இலங்கை அரசால் தேடப்பட்டு வந்த நிலையில், அங்கிருந்து தப்பி அகதி போர்வையில் குடும்பத்துடன் தமிழகம் வந்தது மறுநாள் தெரிய வந்ததையடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்த மாநில உளவுத்துறை போலீசார் புழல் சிறையில் அடைத்தனர்.

## போதை பொருள் கடத்தல் வழக்கு நபர் அகதியாக ஊடுருவல்



இலங்கையை சேர்ந்த ஒருவர் படகில் அகதியாக வந்ததாக தெரிவித்தபோது வேதாரண் யம் மரைன் போலீசாரால் அவரை கைது செய்யப்பட்டார்.

அவர் அளித்த பதில் முரணாக இருந்ததால் உளவுத்துறை அதிகாரிகள் இரண்டு நாட்கள் தீவரமாக விசாரித்தனர்.

அதில் அவர் மீது இந்தியாவுக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்திய வழக்கு மற்றும் கஞ்சா போதை பொருள் தொடர்பான வழக்குகள் இலங்கையில் இருப்பதும் அவர் அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளி என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

சமீபத்தில் ராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்திற்கு வந்த மன்னாரை சேர்ந்த செல்வராஜ் என்பவர், பொருளாதார நெருக்கடி காரணமாக படகில் 2 லட்சம் ரூபாய் கொடுத்து தான் மட்டும் தனியாக படகில் தனுஷ்கோடி வந்ததாகவும், மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க அனுமதி கடிதம் வேண்டும் எனவும் போலீசாரிடம் கேட்டுள்ளார்.

போலீசாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு கொண்டிருந்த அதே நேரத்தில் செல்வராஜ் புகைப்படத்தை இலங்கை மன்னாருக்கு அனுப்பி உளவுத்துறை அதிகாரிகள் விசாரித்தனர்.

செல்வராஜ் மகன் சிந்துஜன் மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டு, மன்னார் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு மீண்டும் வவுனியா சிறைக்கு அழைத்துச் செல்லும் போது தப்பித்து விட்டதாக தெரிய வந்தது.

செல்வராஜ் உடன் தமிழகம் வந்த சிந்துஜன் தலைமறைவாக இருந்த போது உளவுத்துறை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு பிறகு சிறையில் அடைக்கப்பட்டார்.

## இந்தியாவுக்கு பேராபத்து ஏற்பட வாய்ப்பு

தொடர்ந்து அகதிகள் போர் வையில் தமிழகத்தில் தஞ்சமடையும் இலங்கை குற்றவாளிகளை கண்டறிவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து நீண்ட காலமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் பணியாற்றி வரும் பெயர் வெளியிட விரும்பாத புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் பேசினார்.

கடந்த மார்ச் மாதம் முதல் ஒரு ஆண்டாக இலங்கையிலிருந்து அடைக்கலம் தேடி தமிழ்நாட்டுக்கு வரும் இலங்கை தமிழர்களை விசாரணை செய்து மண்டபம் ஈழத்தமிழர் மறு வாழ்வு முகாமில் தங்க வைத்து வருகிறோம்.

இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி அடுத்துள்ள மணல் திட்டில் இறங்கி இருப்பதாக தகவல் வரும். உடனே சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருப்பவர்களை மீட்டு ராமேஸ்வரம் அழைத்து வந்து முதலுதவி சிகிச்சை கிடைக்க நடவடிக்கை எடுப்போம். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு மனதளவில் அவர்கள் சரியான பின்னர் புலனாய்வுத் துறை அதிகாரிகளின் விசாரணை நடக்கும்.

ஒரு சிலர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளிப்பார்கள். அதுமட்டுமில்லாமல் அவர்களை படகில் அழைத்து வந்த இலங்கை நபர்கள் குறித்து தகவல் தெரிவித்து விடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருப்பார்கள்.

தனித்தனியாக விசாரித்து பின்னர் மண்டபம் ஈழ தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க அனுமதி அளிப்போம்.

பெரும்பாலும் இலங்கையில் இருந்து அடைக்கலம் தேடி வரும் இலங்கை தமிழர்கள் அதிகமாக விசாரணை செய்யப்படுவதில்லை. ஆனால், கடந்த சில மாதங்களாக அகதிகள் போர்வையில் இலங்கை அரசால் தேடப்படும் குற்றவாளிகள் மற்றும் சந்தேக நபர்கள், தமிழ்நாட்டில் பதுங்கும் நிலை ஏற்பட்டதால் விசாரணை

(09ஆம் பக்கம் பார்க்க)



# கடலில் 171 ட்ரில்லியன் பிளாஸ்டிக் குப்பைகள்: உயிர்க் குலத்தை அச்சுறுத்தும் ‘மிதக்கும் நோய்’

உலக பெருங்கடல்களில் மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் மொத்த எண்ணிக்கையை அறிவியல்பூர்வமாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் ஒரு வேலையற்ற வேலை என்று தோன்றுகிறதா?

அந்த பிளாஸ்டிக் உங்களை, நம்மை என்ன செய்யும் என்று படித்துவிடுங்கள். பிறகு அப்படி நினைக்கமாட்டீர்கள்.

சரி மீண்டும் எண்ணிக்கைக்கு வருவோம்.

கடலுக்கு ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பெயர். ஆனால், இருப்பது ஒரே கடல்தான். இந்த எளிய உண்மை எல்லோருக்கும் தெரியும். இப்படி புவியின் பரப்பில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியில் பரவியிருக்கும் கடலில் மொத்தம் மனித குலம் சிந்தியிருக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் எண்ணிக்கை, 171 ட்ரில்லியன் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

1 ட்ரில்லியன் என்பது லட்சம் கோடி. வேறொரு விதமாக சொன்னால், 1.71 கோடி-கோடி.





கடல் எப்போதும் இப்படி குப்பையாக இருந்த தில்லை. 2005ம் ஆண்டு கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் எண்ணிக்கை வெறும் 16 ட்ரில்லியனாக இருந்தது. 2019இல், அதாவது பதினான்கே ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 171 ட்ரில்லியன் குப்பைகளாக அதிகரித்திருக்கிறது. அது மட்டுமல்ல. எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால், இந்த எண்ணிக்கை 2040இல் மூன்று மடங்காக உயரும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள்.

பிளாஸ் ஒன் என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ள ஓர் ஆய்வு முடிவில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரி இதனால், சாமானியனுக்கு என்ன பிரச்சனை என்கிறீர்களா?

இந்தப் பிளாஸ்டிக் குப்பைகள் மீன்களைக் கொல்கின்றன. மீன்களை மட்டுமல்லாமல் பிற கடல்வாழ் உயிரினங்களைக் கொல்கின்றன.

கடலில் உள்ள இந்த உயிர்ச்சூழல், மனிதர்கள் வாழ்வதற்குத் தேவையான சுற்றுச்சூழலை தாங்கிப் பிடித்திருக்கின்றன. தவிர, மீன் வளம் குறைவது என்பது அவற்றை உணவுத் தேவைக்காக சார்ந்திருக்கும் மனித குலத்துக்கு மோசமான செய்திதானே.

தவிர, இந்த பிளாஸ்டிக் துணுக்குகள், மட்கி, ஆபத்தற்ற பொருளாக சிதைவதற்கு பல நூறு ஆண்டுகள் ஆகும்.

யு.என். ஹைசீஸ் ட்ரீட்டி என்று ஆங்கிலத்தில் அறியப்படும், ஐ.நா. ஆழ்கடல் ஒப்பந்தத்தை கடந்த வாரம் ஐ.நா. உறுப்பு நாடுகள் இறுதி செய்தன. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் 30 சதவீத கடலைக் காப்பாற்றுவதுதான்.

இப்போது வெளியாகியுள்ள, புதிய பிளாஸ்டிக் குப்பை மதிப்பீட்டை எட்டுவதற்கு 1979ஆம் ஆண்டு முதல் திரட்டப்பட்ட தரவுகளை விஞ்ஞானிகள் பயன்படுத்தினர். பிறகு, சமீப காலத்தில் டிராலர்களையும், வலைகளையும் பயன்படுத்தி திரட்டப்பட்ட கடற்குப்பைகள் குறித்த தரவுகளையும் அத்துடன் இணைத்து முடிவுகளையும் இறுதிப்படுத்தினர்.

இந்த ஆய்வுப் பயணங்களின்போது வலையில் சிக்கும் பிளாஸ்டிக் எண்ணிக்கையைக் கொண்டு உலகம் முழுவதும் கடலில் குப்பைகளின் எண்ணிக்கையைக் கண்டறிவதற்காக ஒரு கணித மாதிரியை உருவாக்கினார்கள்.

இந்த முறையில், 171 ட்ரில்லியன் பிளாஸ்டிக் துணுக்குகள் கடலில் இருப்பதாக முடிவுக்கு வந்தார்கள். இதில், சமீப காலத்தில் கடலில் வீசப்பட்ட புதிய குப்பைகளும், கடந்த காலத்தில் வீசப்பட்டு சிதைந்து சிறு துணுக்கள் ஆனவை எல்லாமும் அடக்கம் என பிபிசியிடம் தெரிவித்தார், இந்த ஆய்வுக்கு தலைமை வகித்தவரும், 5 Gyres இன்ஸ்டிடியூட்டை சேர்ந்தவருமான டாக்டர் மார்கஸ் எரிக்சன்.

பாட்டில்கள், பொட்டலப் பொருள்கள் (பேக்கேஜிங் மெட்டீரியல்), மீன் பிடிப் பொருள்கள் போன்ற ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் காலப்போக்கில் சூரிய ஒளி காரணமாகவும், பொறியமைப்பு சிதைவு காரணமாகவும் சிறு சிறு துணுக்குகளாக நொறுங்கி விடுகின்றன.

திமிங்கிலங்கள், கடற்பறவைகள், கடல் ஆமைகள், மீன்கள் போன்றவை இந்த பிளாஸ்டிக் குப்பையை தவறாக உணவு என்று நினைத்து விழுங்கிவிடுகின்றன. காலப்போக்கில் இந்த பிளாஸ்டிக் பொருள்கள் வயிற்றில் அடைத்துக் கொள்ள, அவை பட்டினியால் இறக்க நேரிடுகிறது.

இந்தக் குப்பைகள், மீன்கள், பறவைகள் உள்ளிட்டவற்றின் உடல் வாயிலாகப் பயணித்து நம் குடிநீரில் கலக்கின்றன.

இப்படிப் பயணித்து வரும் மைக்ரோ பிளாஸ்டிக் என்று அறியப்படும் நுண் பிளாஸ்டிக் துகள்கள் மனிதர்களின் நுரையீரலில், ரத்தக் குழாயில் இவ்வளவு ஏன் வயிற்றில் இருக்கும் மனித சிசுவையும், தாய் உடலையும் இணைக்கும் (‘நஞ்சு’ என தமிழில் அறியப்படும்) பிளசன்டாவிலும் காணப்படுகின்றன.

இந்த நுண் பிளாஸ்டிக் துகள்கள் மனித உடல் நலனை பாதிக்கின்றனவா என்பது குறித்து இன்னும் போதிய அளவு அறியப்படவில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இதற்காகத் தீர்வைத் தேட முயலும் போது, பிளாஸ்டிக் குப்பைகளை கடலில் இருந்து அகற்றுவது, அவற்றை மறுசுழற்சி செய்வது போன்ற மிகுந்த பயனளிக்காத யோசனைகளை முன்வைக்காமல், பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி அளவையும், அவற்றைப் பயன்படுத்தும் அளவையும் குறைப்பது தொடர்பில் அதிக கவனம் வைக்கவேண்டும் என்கிறார்கள் இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள். ●



# இலங்கை அகதிகள் போர்வையில்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

‘தமிழ்நாடு வரும் இலங்கை தமிழர்களிடம் விசாரணை நடத்தும் போது சில சந்தேகங்கள் ஏற்படும். ஆனால் அதிகாரபூர்வமாக அதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடிவதில்லை. இதனால் பல நேரங்களில், விசாரணை முழுமை பெறாமலேயே இந்தியாவுக்கு வந்தவர்கள், அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்,” என்று அந்த அதிகாரி கூறினார்.

இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் நேரடியாக இலங்கை அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசக் கூடாது என்ற விதி உள்ளது. எனவே, நாட்டின் பாதுகாப்பு நலன் கருதி இரு நாட்டு புலனாய்வுத்துறை அதிகாரிகள் அடைக்கலம் தேடி வரும் இலங்கை தமிழர்கள் விவரங்களை உடனடியாக பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு பரஸ்பரம் தொடர்பை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று புலனாய்வு அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ராமேஸ்வரம் வரும் இலங்கை தமிழர்கள் குற்ற பின்னணிகள் குறித்து உரிய நேரத்தில் தகவல் தெரிவித்தால் நிச்சயம் அது புலனாய்வுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது அந்த அதிகாரிகளின் கோரிக்கை.

இது குறித்து நம்மிடையே பேசிய புலனாய்வு அதிகாரி, ‘சமீபத்தில் அடைக்கலம் தேடி தமிழகத்திற்கு வந்த சிலர் முகாம்களில் தங்கி இருக்கும் இலங்கை தமிழர்களை கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமாக அனுப்ப திட்டமிட்டு செயல்பட்டு வந்தவர்களை கண்டறிந்து, அவர்களை கைது செய்துள்ளோம்,” என்றார்.

இலங்கையில் இருந்து வந்தவர்களிடம் முழுமையாக விசாரணை நடத்தாமல் அகதிகள் முகாமில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவ்வாறு வருபவர்களில் சமூக விரோத செயல்களில் ஈடுபடக் கூடிய நபர்களும் ஊடுருவினால், அவர்களால் தமிழகத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்ற எச்சரிக்கை அறிக்கையை இந்திய அரசு வாயிலாக இலங்கைக்கு உளவுத்துறையினர் அனுப்பியுள்ளனர். ●



# சாந்தகுறோஸ் வெற்றிவாகை

அம்பாறை, மார்ச் 13

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலானந்த சனசமூக நிலையமும் இணைந்து "விபுலானந்த விளையாட்டுக் கழகத்திலிருந்து உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாக" நடத்திய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சொறிக்கல்முனை சாந்தகுரோஸ் அணி வெற்றிவாகை சூடியது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சம்மாந்துறை எவர்கிறீன் அணியினரை எதிர்த்து சொறிக்கல்முனை சாந்தகுரோஸ் அணியினர் மோதினர்.

இப்போட்டியில் 3-1 என்ற புள்ளிக்கணக்கில் சாந்தகுரோஸ் அணியினர் வெற்றியை தமதாக்கிக்கொண்டனர்.

இச்சுற்றில் தனது திறமையை வெளிக்காட்டிய வீரர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டதோடு வெற்றி பெற்ற சாந்தகுரோஸ் அணியினருக்கு பெறுமதி வாய்ந்த கேடயமும் 25ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

(அ)

# இரு துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 13

மஹியங்கனை, அளுகாத்தியாவ-அல்தெனிய பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை மஹியங்கனை நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துவ தற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

# உடல் வலுவூட்டல் நிலையம் திறப்பு

திருமலை, மார்ச் 13

உடல் வலுவூட்டல் பயிற்சி நிலைய திறப்பு விழா மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான உடல் வலு வூட்டல் பயிற்சி அங்குரார்ப்பண நிகழ்வும் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள வரோதயநகர் அரச வளாகத்தில் கடந்த 9ஆம் திகதி மாலை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் நூ.மு. நௌபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக்க, பேரவைச் செயலகச் செயலாளர் எம்.எம்.நஸீர் மற்றும் திணைக் களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

(அ)



# மரண வீட்டுக்கு உணவு எடுத்துச் சென்றவர் பலி

மட்டக்களப்பு, மார்ச் 13

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்த தனது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு உணவு எடுத்துச் சென்றபோதே குறித்த நபர் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றபோது படி ரக வாகனம் மோதியதிலே அவர் மரணமடைந்தார் என பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்தவர் வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த முருகன் (வயது-55) எனும் தங்க நகை ஒட்டும் வியாபாரியாவார்.

(அ)

# பொய் காரணங்களை கூறி பண வசூலிக்கும் ஆசாமிகள்

மட்டக்களப்பு, மார்ச் 13

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிலர் பொய்யான காரணங்களை கூறி பண வசூலிப்பில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி பள்ளிவாசல்களில் பொதுமக்களுக்கு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் மீராவோடை, பதுரியாநகர், மாஞ்சோலை உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு வீடு வீடாக வரும் நபர்கள் தாம் பிரதேச பள்ளிவாசல்களின் அனுமதியோடு வருவதாக பொய் கூறி பண வசூலிப்பில் ஈடுபடுகின்றனர்.

இவர்களின் பொய்யான கதைகளை நம்பி யாரும் பணத்தை வழங்கவேண்டாம் என்று பள்ளிவாசல்களில் பொதுமக்களுக்கு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

(அ)

கல்வி tv CHANNEL-1

**13.03.2023 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**13.03.2023 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சேமிப்புப் பணத்தை வழங்க சங்கம் மறுப்பு!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

அம்பாறை, மார்ச் 13

**கல்வி ஊழியர்கள் சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தில் அதிபர் ஆசிரியர்கள் மாதாந்தம் சேமித்து வந்த சேமிப்பு பணத்தை, ஓய்வுபெறும் நேரத்தில் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிராந்திய காரியாலயத்தில் இந்த சேமிப்புப் பணத்தை பெறுவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் கடந்த மூன்று மாத காலமாக அலைந்து திரிகின்றார்கள்.

அங்குள்ள முகாமையாளர் அதனை வழங்க நிதி இல்லை என்று கையை விரித்துள்ளார்.

கல்வி ஊழியர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தில் மாதாந்தம் அதிபர்கள், ஆசிரியர்களால் செலுத்தப்பட்டு வந்த சந்தா சேமிப்புப் பணம் ஓய்வு பெறுகின்றவேளையில் மொத்தமாக வழங்கப்படுவது வழமை.

ஆனால், கடந்த மூன்று மாத காலமாக ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இந்த சேமிப்புப் பணத்தை வழங்க சங்கம் மறுப்பு தெரிவித்து வருகிறது.

அம்பாறை நகரில் உள்ள அம்பாறை பிராந்திய கல்வி ஊழியர் சிக்கன கடன் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் சென்று விசாரித்தபோது "சேமிப்பு பணத்தை வழங்க எங்களிடம் பணம் இல்லை. நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்" என்று அங்குள்ள முகாமையாளர் பொறுப்பில்லாமல் பதிலை அளித்ததாக கடந்த மாதம் ஓய்வு பெற்ற சமமாந்துறையைச் சேர்ந்த அதிபர் அமீர் அலி கவலையோடும் விரக்தியோடும் கூறினார்.

இதனால் கஷ்டப்பட்டு சேமித்த பணத்தை பெற முடியாமல் அதிபர்கள், ஆசிரியர்கள் அதிர்ச்சியும் விரக்தியும் அடைந்துள்ளனர் .

அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சேமிப்பை பொறுத்து மொத்தமாக சுமார் 80,000 தொடக்கம் ஒரு லட்ச ரூபாய் வரை சேமித்துள்ளனர்.

ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாத காலமாக ஓய்வூதியமும் இன்னும் கிடைக்கப்பெறாமல் உள்ளது.

அதேவேளை சேமித்த பணத்தையும் பெறமுடியாமல் இவ்வாறு மறுக்கப்பட்டு வருவதால் அவர்கள் வாழ்க்கை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றது. வாழ திண்டாடுகின்றனர்.இது அவர்களது உரிமையையும் மீறுகின்ற செயல் என்று அதிபர் அமீர் அலி மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை , தற்போது மாதாந்த சந்தாப் பணத்தை செலுத்திவரும் அதிபர்கள், ஆசிரி யர்கள் தமது மாதாந்த சந்தா பணத்தை இந்த மாதத்தில் இருந்து நிறுத்தப் போவதாகவும், இனிமேல் சந்தா செலுத்தப் போவதில்லை என்றும் அந்தந்த வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர்களுக்கு அறிவித்து வருகின்றார்கள்.

கஷ்டப்பட்டு தான் சேமித்த பணத்தை மீளப்பெற முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில் நாம் ஏன் சந்தா செலுத்தவேண்டும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ)



# சிறந்த பெண் தொழில் முயற்சியாளருக்கு விருது!

மட்டக்களப்பு, மார்ச் 13

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறந்த பெண் தொழில் முயற்சியாளருக்கான ஜனாதிபதி விருதினை காத்தான்குடியைச்சேர்ந்த திருமதி பாத்திமா பஹீமா சுக்ரியும் பெற்றுக்கொண்டார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சினால், "அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்" எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதியின் தலைமையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்த பெண்கள் பலர் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான கௌரவ விருதை காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திருமதி பாத்திமா பஹீமா சுக்ரியும் பெற்றுக்கொண்டார். (அ)

# நள்ளிரவில் 350 நெல் மூடைகளை துவம்சம் செய்த காட்டு யானைகள்!





அம்பாறை, மார்ச் 13

நள்ளிரவில் வயலுக்குள் இறங்கிய சுமார் 60 காட்டு யானைகள், 350 நெல்மூடைகளை துவம்சம் செய்துள்ளன.

இச்சம்பவம், காரைதீவில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

காரைதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள வளைந்தவட்டை மேல்கண்டத்திலுள்ள விஷ்ணு கோயிலுக்கு சொந்தமான 09 ஏக்கர் காணி உள்ளிட்ட 13 ஏக்கரில் விளைந்த நெல் அறுவடை செய்யப்பட்டு, வாகனத்தில் ஏற்றுவதற்காக மூடைகளில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கமநல உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன் மற்றும் அதிகாரிகளுக்கு இது குத்து முறையிடப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் காலையில் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று பார்வையிட்டார்.

அறுவடை நடைபெறும் வேளையில் வனவிலங்கு அதிகாரிகள் பாதுகாப்பு வழங்கி விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுகாதார விழிப்புணர்வுச் செயலமர்வு

அம்பாறை, மார்ச் 13

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிழக்கு இளைஞர்கள் அமைப்பு மற்றும் மாளிகா மீன் மொத்த வியாபார மற்றும் நலன்புரிச் சங்கம் ஆகியன காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த பெண்களுக்கான சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் தலைவரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான தானீஷ் ரஹ்மத்துல்லாஹ்வின் ஒருங்கிணைப்பில், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வஸீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிராந்திய தாய் சேய் நல வைத்திய அதிகாரி எம்.எச். றிஸ்வின் மற்றும் பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி எமீ.ஏ.சீ.எம்.பசால் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். (அ)

# வயலில் உழவு இயந்திரம் புரண்டதில் ஆயித்தியமலையில் சாரதி உயிரிழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பு - ஆயித்தியமலை வயல் பகுதியில் உழவு இயந்திரத்தால் உழுது கொண்ட போது, உழவு இயந்திரம் தலைகீழாக பிரண்டதில் அதனைச் செலுத்திய சாரதி உயிரிழந்த சம்பவம், நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலை நெல்லூரைச் சேர்ந்த 34 வயதுடைய தர்மதாசா சதீஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உழும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தபோது, உழவு இயந்திரத்தின் பின்பக்க ரயர்கள் வயலில் புதைந்ததையடுத்து, உழவு இயந்திர முன்பகுதி மேல் எழுந்து தலைகீழக புரண்டடதையடுத்து, அவர் கீழ் விழுந்ததில் கலப்பையில் தலை அடிபட்டு படுகாயமடைந்ததையடுத்து சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கல்முனை ஸாஹிராக் கல்லூரிக்கு முன்னாள் முதல்வரினால் கணிணி

அம்பாறை, மார்ச் 13

கல்முனை ஜாஹிரா கல்லூரி தேசிய பாடசாலைக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் கணனி ஒன்றை அன்பளிப்பு செய்தார்.

இது தொடர்பான நிகழ்வு நேற்று முன் தினம் முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இக் கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபிர், ஆசிரியர்களான ஏ.எல்.எம். நிசான், எம். ஜின்னா மற்றும் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் எம். இஸ்மாயில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் அனுசரணையில் இடம்பெற்ற " மெற்றோ பொலிட்டன் ஸஹ்ரியன் பிரிமியன் லீக் " சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப்பிடம் இக் கல்லூரியின் அதிபர் ஜனாப் .எம்.ஐ. ஜாபிர் கணிணி ஒன்றின் தேவை கருதி விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் இந்த கணிணி தொகுதியை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜாவா கடலில் ஜகார்த்தா மூழ்கும் அபாய நிலைமை

## தலைநகரை மாற்றுகிறது இந்தோனேசியா

ஜகார்த்தா, மார்ச் 13

**ஜாவா கடலில் ஜகார்த்தா மூழ்கும் அச்சுறுத்தல் இருப்பதாலும் அடிக்கடி இடம்பெறும் நிலநடுக்கங்கள் காரணமாகவும் தலைநகரை மாற்றும் பணிகளை இந்தோனேசியா ஆரம்பித்துள்ளது.**



தலைநகர் ஜகார்த்தாவை கைவிட்டு, போர்னியாவை தலைநகராக்கும் நடவடிக்கைகளில் இந்தோனேசியா ஆர்வம் காட்டி வருகிறது.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ நெரிசல், காற்று மாசால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் ஜகார்த்தாவிற்கு நிலநடுக்கம் மற்றும் கடலில் மூழ்கும் அபாயங்களும் காத்திருப்பதால், விரைவில் தலைநகர் என்ற அந்தஸ்திலிருந்து ஜகார்த்தா ஓய்வுபெறும் என அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்தோனேசியா 2022ஆம் ஆண்டு மத்தியிலேயே புதிய தலைநகரை கட்டமைக்கும் பணிகளை ஆரம்பித்துவிட்டது.

தற்போது, இந்தோனேசிய அரசாங்கமானது ஜகார்த்தாவை காலி செய்துகொண்டு போர்னியோ தீவை நோக்கி நகர்கிறது.

பசுமையான தீவுப் பகுதியை தலைநகராக மாற்றுவதற்கு ஏராளமான சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர்.

வனப்பகுதி அழிக்கப்பட்டு, வன விலங்குகளுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. எனினும், தலைநகரை மாற்றும் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

ஜகார்த்தா வேகமாக கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருப்பதாகவும், 2050ஆம் ஆண்டுக்குள் நகரின் மூன்றில் ஒரு பங்கு கடலில் மூழ்கிவிடும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன் நிலத்தடி நீர் மற்றும் காற்று கடுமையாக மாசடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யாவின் சுகோய்-35 போர் விமானங்களை வாங்கும் ஒப்பந்தத்தை வெளியிட்டது ஈரான்!



தெஹ்ரான், மார்ச் 13

ரஷ்யாவிடம் இருந்து சுகோய் எஸ்யூ-35 போர் விமானங்களை வாங்க ஈரான் ஒப்பந்தம் செய்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சர்வதேசத் தடைகள் காரணமாக உதிரி பாகங்களைப் பெறுவதற்குப் போராடிய ஈரானின் வயதான போர் விமானங்களை நவீனமயமாக்க இது உதவக்கூடும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு அளித்த அறிக்கையில், 1980-88 ஈரான்-ஈராக் போரை அடுத்து அதன் விமானப்படைக்காக போர் விமானங்களை வாங்க நாடுகளை அணுகத் தொடங்கியதாக தெஹ்ரான் கூறியது.

ஐ.நா தீர்மானம் 2231 இன் கீழ் ஈரான் பாரம்பரிய ஆயுதங்களை வாங்குவதற்கான கட்டுப்பாடுகள் அக்டோபர் 2020 இல் காலாவதியான பிறகு அவற்றை விற்கத் தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவித்தது என்று அதிகாரபூர்வ ஐ.ஆர்.என்.ஏ செய்தி நிறுவனம் வெள்ளிக்கிழமை அறிக்கையை வெளியிட்டது.

சுகோய் 35 போர் விமானங்கள் ஈரானுக்கு தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்று அது மேலும் கூறியது. (அ)

# பின்லாந்து பிரதமர் சன்னா உக்ரைனுக்கு திடீர் விஜயம்

கீவ், மார்ச் 13

உக்ரைனுக்கு பின்லாந்து நாட்டின் பிரதமர் சன்னா மரின் நேற்று முன் தினம் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவி மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன.

உக்ரைனின் உட்கட்டமைப்புகளை தகர்க்கும் நோக்கில் ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதனால் உக்ரைனில் பல பகுதிகளில் மின்சாரம் தடைபட்டு இருளில் மூழ்கியுள்ளது.

சர்வதேச நாடுகளில் தங்களுக்கு மேலும் இராணுவ உதவிகளை வழங்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், போர் நடந்து வரும் சூழ்நிலையில் உக்ரைனுக்கு பின்லாந்து நாட்டின் பிரதமர் சன்னா மரின் விஜயம் செய்துள்ளார்.

அவரை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வரவேற்று உரையாடினார்.

ஓராண்டு கால போரில் உக்ரைனுக்கு இராணுவ உதவிகள் வழங்கியதற்காக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பின்லாந்திற்கு நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# படகு அகதிகளுக்காக பிரான்ஸில் முகாம் நிறுவுவதற்கு லண்டன் நிதி!

## பாரிஸ் வந்தார் ரிஷி சுனாக் இரு தரப்பு உறவில் திருப்பம்

பாரிஸ், மார்ச் 13

ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயற்சிக்கின்ற படகு அகதிகள் விவகாரத்தைக் கையாள்வதில் மிக நெருக்கமாகச் செயற்படுவதற்கு பாரிஸிம் லண்டனும் தயாராகின்றன.

இது தொடர்பான இருநாடுகளது முயற்சிகள் அடங்கிய திட்டம் நேற்று முன் தினம் பாரிஸில் அறிவிக்கப்பட்டுள்ளது. தினசரி படகுகளில் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்து செல்ல முயற்சிக்கின்ற வெளிநாட்டுக் குடியேறிகளை முற்றாகத் தடுத்து நிறுத்த லண்டன் முடிவு செய்துள்ளது. பிரான்ஸிக்கு நிதி உதவி அளித்துக் குடியேறிகளைத் தடுப்பதற்கான புதிய உடன்பாட்டுத் திட்டத்தை பிரதமர் ரிஷி சுனாக் பாரிஸில் வைத்து வெளியிட்டிருக்கிறார்.

அதன் ஒரு செயற்பாடாக ஆங்கிலக் கால்வாய் அகதிகளுக்கான புதிய தடுப்பு முகாம் ஒன்றை பிரான்ஸின் வட பகுதியில் நிறுவுவது உட்படத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக லண்டன் அடுத்த மூன்று ஆண்டுகளில் 541 மில்லியன் ஈரோக்களை பாரிஸிக்கு வழங்கவுள்ளது.

இரு நாடுகளின் எல்லை மற்றும் கரையோரக் காவல் படைக் கட்டளை மையம் ஒன்றை நிறுவுவதும், ட்ரோன் உட்பட நவீன தொழில்நுட்ப முறைகளில் படகு அகதிகளைக் கடலில் கண்காணித்துத் தடுப்பதும் புதிய உடன்படிக்கையில் அடங்கியுள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனாக் நேற்று முன் தினம் பாரிஸ் வந்து அதிபர் மக்ரோனுடன் முக்கிய இரு தரப்பு மாநாடு ஒன்றில் பங்கேற்றிருக்கிறார். ஈரோஸ்ரார் ரயிலில் பாரிஸ் வந்தடைந்த சுனாக், எலிஸே மாளிகை சென்று அதிபர் மக்ரோனுடன் முக்கியமான அரசியல் கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.



ரிஷி சுனாக்குடனான சந்திப்பிற்குப் பிறகு கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய மக்ரோன், "இது ஒரு புதிய ஆரம்பம் என்றார்.

பிரிட்டிஷ் - பிரான்ஸ் உறவுகள் கடந்த காலங்களில் சில சமயம் விளையாட்டு போட்டிகளின் போது துண்டிக்கப்பட்டிருப்பினும் - பிரான்ஸ் கடந்த உலகக் கிண்ணத்தின்போது இங்கிலாந்தை வீழ்த்தியிருப்பினும் - வரலாறு இரு நாடுகளையும் எப்போதும் இணைத்தே வைத்துள்ளது - என்று அவர் அப்போது தெரிவித்தார்.

சமீப ஆண்டுகளில் இரு நாட்டு உறவுகளில் பல்வேறு சவால்கள் இருந்ததைக் குறிப்பிட்ட ரிஷி சுனாக், அதேநேரம் இன்றைய சந்திப்பு "ஒரு புதிய தொடக்கத்தைக் குறிக்கிறது., இது ஒரு புது முயற்சி" என்று நம்பிக்கை வெளியிட்டார்.

ஆபிரிக்கா உட்பட வெளிநாட்டுகளைச் சேர்ந்த குடியேறிகள் பிரான்ஸ் ஊடாக ஆங்கிலக் கால்வாயைக் கடந்து படகுகள் மூலம் இங்கிலாந்து நோக்கிப் படையெடுத்துச் செல்வது சமீப ஆண்டுகளாக இரு நாடுகளிடையேயும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் விவகாரமாக இருந்து வருகிறது.

படகுகள் உட்பட சட்ட விரோதமான வழிமுறைகளில் நாட்டுக்குள் பிரவேசிப்பவர்களுக்குப் புகலிடம் வழங்குவதை நிறுத்துதல்,28 நாட்களுக்குள் அவர்களைச் சொந்த நாட்டுக்கு அல்லது மூன்றாவது நாடு (றுவாண்டா) ஒன்றுக்குத் திருப்பி அனுப்புவது உட்பட பல்வேறு கடுமையான விதிகள் அடங்கிய புதிய குடியேற்றச் சட்டமூலத்தை ரிஷி சுனாக்கின் அரசு அண்மையில் வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (அ)

# இஸ்ரேலில் அரசுக்கு எதிராக 10ஆவது வாரம் போராட்டம்!



டெல் அவிவ், மார்ச் 13

இஸ்ரேலில், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் புதிய நீதித்துறை மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நீதித்துறையில் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் நீதித்துறை சுதந்திரத்தைக் குறைப்பதுடன், ஊழல் குற்றச்சாட்டிலிருந்து தப்ப பிரதமர் சட்டத்தை திருத்தி இருப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து, 10ஆவது வாரமாக அங்கு போராட்டங்கள் வலுத்துவரும் நிலையில், தலைநகர் டெல் அவிவில் திரண்ட ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

கடந்த சனிக்கிழமையன்று நாடு முழுவதும் 5 இலட்சம் ஜனநாயக சார்பு போராட்டக்காரர்கள் பங்கேற்றனர் என்றும் இது வரலாற்றில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# ஒரு விக்கெட்டை இழந்தது நியூசிலாந்து

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இரண்டாவது இன்னிஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 28 ஓட்டங்களை பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று நியூசிலாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன் பிரகாரம் முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 355 ஓட்டங்களையும் நியூசிலாந்து அணி 373 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி, சகல விக்கெட்களையும் இழந்து 302 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் 9 விக்கெட்கள் கைவசம் இருக்க இன்னும் 257 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இன்று நியூசிலாந்து அணி இறுதி நாளை எதிர் கொள்ளவுள்ளது.

# சதம் அடிக்க கவாஜாவின் அனுபவம் உதவியது!



இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய சகல துறை கமரூன் கிரீன் சதம் அடித்தார். அவர் 170 பந்தில் 114 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 18 பவுண்டரி அடித்தார். 20ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது முதல் சதமாகும்.

சதம் அடித்தது தொடர்பாக கமரூன் கிரீன் கூறியதாவது:- இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. மதிய உணவு இடைவேளையின்போது நான் 95 ஓட்டங்களில் இருந்தேன். இடைவேளையின் 40 நிமிடங்கள் எனக்கு 1 மணி 40 நிமிடம் போல் இருந்தது. ஆனால் நான் உஸ்மான் கவாஜாவுடன் துடுப்பாட்டம் செய்தேன். அவர் அற்புதமாக துடுப்பாட்டம் செய்தார். அவரது அனுபவங்கள் எனக்கு நிறைய உதவியது. அந்த அனுபவம் சதம் அடிக்க உதவியது. உஸ்மான் கவாஜா 10 ஆண்டுகளுக்கும் மேலாக டெஸ்ட் கிரிக்கெட் விளையாடிய அனுபவம் வாய்ந்தவர். அவர் என்னை போன்ற வீரர்களுக்கு, தனது அனுபவத்தை பற்றி சொல்லும் விதத்தில் மிகவும் மதிப்புமிக்கவர். அவரிடமிருந்து என்னால் முடிந்த வரை கற்றுக்கொள்ள முயற்சிக்கிறேன். இது எனது 20-வது டெஸ்ட் போட்டி. டெஸ்ட் கிரிக்கெட்டின் ஏற்ற- தாழ்வுகளை பார்க்க எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. இது நம்ப முடியாத கடினமான ஆட்டம். இது போன்ற தருணங்களை நீங்கள் பெறும்போது மிகவும் மகிழ்ச்சி அளிக்கும். டெஸ்ட் கிரிக்கெட் எவ்வளவு கடினமானது என்பதை பார்த்திருக்கிறேன். அதன் ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வருகிறேன்-என்றார்.

# சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 17,000 ஓட்டங்கள் கடந்த ரோஹித்

இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடந்து வருகின்றது.

முதல் இன்னிங்சில் ரோகித் சர்மா 21 ஓட்டங்கள் எட்டியபோது சர்வதேச கிரிக்கெட்டில் அனைத்துப் போட்டிகளிலும் சேர்த்து 17,000 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டியுள்ளார்.

இந்த மைல்கல்லை எட்டிய 6ஆவது இந்திய வீரர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரர் ஆனார். ரோகித் சர்மா தனது 438ஆவது சர்வதேச இன்னிங்சில் இதனை செய்திருக்கிறார்.

ரோகித் சர்மா இது வரை 48 டெஸ்ட் போட்டிகள், 241 ஒருநாள் போட்டிகள் மற்றும் 148 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் 9,782 ஓட்டங்களை ஒருநாள் போட்டிகளிலும், 3,853 ஓட்டங்களை ரி-20 போட்டிகளிலும், அதைத் தொடர்ந்து 3,350 ஓட்டங்கள் டெஸ்ட் போட்டிகளிலும் எடுத்துள்ளார்.

ஏற்கனவே சச்சின், விராட் கோலி, டிராவிட், சவுரவ் கங்குலி மற்றும் எம்.எஸ்.தோனி ஆகியோர் 17000 ஓட்டங்களை கடந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)



# டெஸ்ட் கிரிக்கெட்டில் 5000 ஓட்டங்களை கடந்த 11ஆவது இலங்கை வீரர் சந்திமால்!



5,000 டெஸ்ட் ஓடங்களை கடந்த 11ஆவது இலங்கை வீரர் என்ற மைல்கல்லை முன்னாள் கப்டன் தினேஷ் சந்திமால் நேற்று கடந்தார்.

கிறைஸ்ட்சர்ச்சில் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கையின் இரண்டாவது இன்னிங்ஸில் 25 ஓட்டங்களை பெற்றபோது, சந்திமால் இந்த மைல்கல்லை எட்டினார்.

தினேஷ் சண்ந்திமால் தனது 71ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறார்.

2011 இல் டெஸ்டில் அறிமுகமான சந்திமால் 13 டெஸ்ட் சதங்கள் மற்றும் 24 அரைசதங்கள் அடித்துள்ளார்.

இதனிடையே, இந்த டெஸ்டின் முதல் இன்னிங்சில் அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் கிரிக்கெட்டில் 7,000 ஓட்டங்களை கடந்தார்.

தற்போது இலங்கை அணிக்காக டெஸ்ட் ஓட்டங்கள் குவித்தவர்களின் எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

(அ)

# டோனி விளையாடும் கடைசி ஐ.பி.எல் இதுவா?

டோனி விளையாடும் கடைசி ஐ.பி.எல் தொடர் இதுவாக கூட இருக்கலாம் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரரும், சி.எஸ்.கே முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் தெரிவித்திருக்கிறார்.

இந்த வருட ஐபிஎல் தொடர் வரும் மார்ச் 31ஆம் திகதி தொடங்கவிருக்கிறது. டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நீண்ட நாள்களுக்குப் பிறகு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் களமிறங்க உள்ளது. இதனிடையே டோனி தனது கடைசிப் போட்டியை சென்னை சேப்பாக்கத்தில் விளையாடுவேன் என்று ஏற்கெனவே கூறியிருந்தார்.

இந்நிலையில் அவர் விளையாடும் கடைசி ஐ.பி.எல் போட்டி இந்தத் தொடராகக் கூட இருக்கலாம் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரும், சென்னை சுப்பர் கிங்ஸின் முன்னாள் வீரருமான மத்யூ ஹைடன் தெரிவித்திருக்கிறார்.

ஒரு தனியார்தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த மத்யூ ஹைடன், “சென்னை சுப்பர் கிங்ஸ், ஒவ்வொரு செயல்களையும் சிறப்பாகவும், தனித்தன்மையுடனும் தான் செய்து வருகிறது. அவர்களுக்கென்று தனி வழி உள்ளது. தோனி ஒவ்வொரு முறையும் புத்துணர்ச்சி கொடுத்து அணியை வழிநடத்திப் பலப்படுத்திக்கொண்டே இருக்கிறார். பழைய வீரர்கள் ரீட்டெய்ன் செய்யப்பட்டாலும், முழுமையாகவே ஒரு புதிய அணியாக இது உருவெடுத்து வருகிறது.

டோனியைப் பொறுத்தவரை, இந்த வருட ஐ.பி.எல் தொடர் பிற வருடங்களைவிடச் சிறப்பாகக் கொண்டாடப்படும். நிச்சயமாக அவரின் கடைசி தொடரை அவரின் பாணியிலேயே சிறப்பாக



முடிப்பார். ரசிகர்களும் அதையே விரும்புவார்கள்.

2023, கொரோனாவுக்குப் பிறகு இந்த வருடம்தான் ஐபிஎல் போட்டிகள் இந்தியா முழுவதும் விளையாடப்பட இருக்கின்றன. “யெல்லோ ஆர்மி“ சேப்பாக்கம் மைதானத்தை முழுவதுமாக நிரப்பப்போகிறது. எப்போதும் போல ஹோம் கிரவுண்ட்டில் வீழ்த்த முடியாத அணியாக சென்னை இருக்கும். இந்த இடம்தான் அவர்களின் கோட்டை. அது மட்டுமின்றி, அவர்களின் கேப்டனாக தோனியே இருக்கப்போகிறார். அதுவும் கடைசி முறையாக என்றே நினைக்கிறேன். அதனால் இது நிச்சயம் யாராலும் மறக்கமுடியாத ஒரு தொடராக இருக்கும். சேப்பாக்கில் தன் ரசிகர்கள் மத்தியில் விடைபெறவேண்டும் என்றுதான் தோனி ஐபிஎல்-லில் இருந்து விலகாமலே இருந்தார். அதற்காகவே நாம் நினைத்துப் பார்க்காத அளவுக்கு ரசிகர்கள் கூட்டம் வரப்போகிறது”-என்றார்.

# ரணிலின் செயல்கள் வெறுக்கத்தக்கவை!

## வாசுதேவ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 13

பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின் செயற்படுகள் வெறுக்கத் தக்கவை என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக் கார தெரிவித்தார்.

தேர்தலை நடத்த தேசிய தேர் தல்கள் ஆணைக்குழு மேற்கொள் ளும் நடவடிக்கைகளுக்கு அர சாங்கம் பாரிய தடைகளை ஏற் படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக் கார குற்றம் சாட்டினார்.

உயர் நீதிமன்றத்தின் இடைக் கால தடையுத்தரவை தற்போது சவாலுக்கு உட்படுத்த முயற்சிப் பது தேர்தலை பிற்போடுவதற் கான முயற்சி என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பினர் நாட்டு மக்களின் வாக்குரிமை என்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பி னார்.

எவ்வாறாயினும் இந்த முரண் பாடுகளை களைந்து, நாட்டில் சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார வலியு றுத்தினார். (அ)

# அரசின் ஜனநாயக விரேத செயற்பாடுகளை ஐ.நாவின் கவனத்துக்கு கொண்டு வருவோம்!

## கூறுகிறார் கஜேந்திரகுமார் எம்.பி.



யாழ்ப்பாணம், மார்ச் 13

**இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற பிற்போக்குத் தனமான ஜனநாயக விரேத செயற்பாடுகளை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

அதற்காக எதிர்வரும் 15ஆம் திகதி ஜெனிவாவுக்குச் செல்ல வுள்ளதாகவும் இதன்போது தமிழ் மக்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளுக்கு நீதி வழங் கப்படவேண்டும் என்பதையும் இலங்கையை சர்வதேச நீதிமன் றில் முன்னிலைப்படுத்த நடவ டிக்கை எடுக்க வேண்டும் என் பதை வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தன்னை ஜனநாயகவாதியாக காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்திச் செல்லும் அதே வேளை சர்வதேசத்தை ஏமாற் றும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக கஜேந் திரகுமார் குற்றம் சாட்டினார்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் பொறுப்புக்கூறலையே, இனப்பிரச்னைக்கான தீர்வி னையோ அவரிடத்திலிருந்து எதிர்பார்க்க முடியாது என்றும் இவை உட்பட ஏனைய மனிதா பிமான சட்டங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வ தேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மின்சார சபையை மறுசீரமைக்கும் போர்வையில் விற்பனை செய்ய முயன்றால் கடும் நடவடிக்கை!

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் சாக்குப்போக் கில் இலங்கை மின்சார சபையை விற்பனை செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக தொழிற் சங்கங்கள் கூறுகின்றன.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக் கவோ அல்லது விற்பனை செய் யவோ நடவடிக்கை எடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்ப டும் என இலங்கை மின்சார சபை கூட்டு தொழிற்சங்கக் கூட்டணி யின் அழைப்பாளர் ரஞ்சன் ஜய லால் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மின் சார சபையை மறுசீரமைப்ப தற்கு பல நிறுவனங்கள் உதவி வழங்க முன்வந்துள்ளதாகவும், மின்சார சபையின் மறுசீர மைப்பு தொடர்பான முன்னேற் றம் குறித்து பல தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

உலக வங்கி, ஆசிய அபிவி ருத்தி வங்கி, யு.எஸ் எயிட் மற் றும் செய்க்கா ஆகியவை இந்த செயல்முறைக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து தெரிவித்துள் ளதாக எரிசக்தி அமைச்சர் கூறி னார்.

இதற்கான வழிமுறைகள் மற்றும் காலக்கெடு விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் படும் என அமைச்சர் விஜே சேகர மேலும் குறிப்பிட்டார்.

# பெண்கள் மீதான வன்முறைகு எதிராக கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்



கிளிநொச்சி, மார்ச் 13

பெண்களுக்கெதிரான வன் முறை மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்க கோரி கவனயீர்ப்பு போராட் டம் ஒன்று நேற்று முன்னெடுக் கப்பட்டது.

பெண்கள் அமைப்பின் ஏற் பாட்டில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு இன்று கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் குறித்த பெண்கள் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் சிறி காந்தி தலைமையில் நடந்தது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கரைச்சி பிரதேச பெண்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, பெண்களுக் கான தொழில் சார் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என வும், அதிகரித்த மின் கட்டணம் மற்றும் பொருளாதார நெருக்க டியால் பெண்கள் பாதிக்கப்படு வதாகவும் அவர்கள் தெரிவித்த னர்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகளவில் நெருக் கடிக்குள்ளாவதாக தெரிவித்த அவர்கள், இதற்கான மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்ப டுத்தி தரவேண்டும் எனவும் கோரினர். (அ)

# 20ஆம் திகதிக்கு முன் தபால் வாக்குச்சீட்டுகளை தேர்தல் ஆணைக் குழுவிடம் கொடுக்கமுடியாது!

## தேவையான பணம் இதுவரை கிடைக்கவில்லை

கொழும்பு, மார்ச் 13

வாக்குச் சீட்டுகளை அச்சி டுவதற்குத் தேவையான பணம் இதுவரை கிடைக்கப்பெறாத தால், எதிர்வரும் 20ஆம் திக திக்கு முன்னர் தபால் மூல வாக் குச் சீட்டுகளை தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்ப டைக்க முடியாது என அரச அச்சகர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- வாக்குச் சீட்டு அச்சிடும் பணிக்கு பணம் செலுத்தாத தால், பணிகளை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள் ளது.

வாக்குச்சீட்டு தயாரித்தல் மற்றும் பெறுபேறு ஆவணங் களை தயாரித்தல் என்பனவற் றிற்காக செலுத்தப்படவேண் டிய 152 மில்லியன் ரூபாவும் ஊழியர் உழைப்புக்காகச் செலுத்த வேண்டிய 52 மில்லி யன் ரூபாவும் இன்னும் கிடைக் கப்பெறவில்லை.

இதுவரை நிறைவடைந்த பணிகளுக்காக திறைசேரி 40 மில்லியன் ரூபாவையே வழங்கி யுள்ளது.

பணம் கிடைத்தால் வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு சுமார் ஒரு மாத காலம் ஆகும்.

அச்சகத்தின் பாதுகாப்புக்கு சுமார் 5 நாட்கள் ஆகும் என பொலிஸ் மா அதிபர் தெரிவித் துள்ளார்.

தேர்தல் செலவுக்குப் பணம் வழங்க நிதியமைச்சின் செயலா ளர் ஒப்புதல் அளித்தால் போதாது என நிதியமைச்சின் செயலாளர் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவருக்கு எழுத்து பூர்வமாக நேற்று அறிவித்துள் ளார்.

அதற்கு நிதியமைச்சரின் ஒப் புதலும் தேவை என தேர்தல் கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி யுள்ள பதில் கடிதத்தில் செயலாளர் குறிப்பிட்டிருந் தார்.

தேர்தல் நடவடிக்கைகளுக் காக 500 மில்லியன் ரூபாவுக் கும் அதிகமான பணம் செல விடப்படும் என மதிப்பிடப் பட்டுள்ளதாக அரசாங்க அச்சகம் கடந்த 8ஆம் திகதி நிதியமைச்சுக்கு அறிவித்திருந் தது.

இந்த அறிவித்தல் தொடர் பில் நிதியமைச்சிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை.

எனவே, வாக்குச் சீட்டு களை அச்சிடுவதற்கு முடிய வில்லை. அச்சிடும் பணியை ஆரம்பிப்ப தற்கு குறைந்தது 200 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ள வேண் டும்.

அரசாங்க அச்சகத்துக்கு அடுத்த வாரத்தில் தொகை கிடைத்தாலும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூல வாக்குச் சீட்டு களை தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க முடி யாது.

இதன்படி, தற்போதைய சூழ்நிலையில் மீண்டும் உள்ளூ ராட்சிச் சபைத் தேர்தல் திகதி தொடர்பில் நிச்சயமற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

மார்ச் 20ஆம் திகதிக்கு முன் னர் தபால் மூல வாக்குச் சீட்டு கள் தேர்தல் ஆணைக்குழு விற்கு கிடைக்காவிட்டால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தபால்மூல வாக் குச் சீட்டுகளை மார்ச் 28ஆம் திகதி முதல் ஆரம்பிக்க முடி யாத நிலை ஏற்படும் - என்றார். (அ)

# தேர்தல் நடப்பது சந்தேகம்!

## விஜித ஹேரத் கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 13

அறிவிக்கப்பட்ட திகதியில் உள்ளூராட்சித் தேர்தல் இடம் பெறுமா அல்லது அரசாங்கத் தின் நோக்கத்துக்கு அமைய தேர்தல் பிற்போடப்படுமா என்ற சந்தேகம் காணப்படுவதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- வாக்குரிமையை பாது காக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைளை கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது.

தேர்தலை பிற்போட ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மேற் கொண்ட அனைத்து நடவடிக் கைகளுக்கும் நீதிமன்றம் முற் றுப்புள்ளி வைத்துள்ளது.

இருப்பினும் தற்போது பாராளுமன்ற சிறப்புரிமையை குறிப்பிட்டுக் கொண்டு ஆளும் தரப்பினர்கள் தேர்தலுக்கு தடையேற்படுத்த முயற்சிக்கின் றனர்-என்றார். (அ)

## அதிபர்...

அனைத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், அறநெறி ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் ஆகியோர் நாளை மறுதினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதனால் அன்றையதினம் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு விரோதமாக இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதில் மின்சார விநியோகம், வைத்திய துறை உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உதைபந்தாட்ட...

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது தலைவர் பதவிக்காக தற்போதைய தலைவர் இமானுவேல் ஆனல்ட் மற்றும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா. இளம்பிறையன் ஆகியோரும், செயலாளர் பதவிக்காக அஜித்குமார் மற்றும் பகீரதன் ஆகியோரும் போட்டியிட்டனர்.

பொதுக்கூட்டத்தை நடத்துவதற்காக யாழ்ப்பாண உதைபந்தாட்ட கவுன்சில் 03 நபர்களை தீர்மானித்திருந்த நிலையில் நேற்றைய கூட்டத்துக்கு ஒருவரே வருகை தந்திருந்தார்.

நேற்றைய கூட்டத்தில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் 04 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக்குக்குக் கடிதம் கிடைத்த நிலையில் அவர்களும் கொழும்பில் இருந்து வருகை தந்து கூட்டத்தில் பங்கேற்றனர்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன யாப்பின்படி ஒருவர் 2 தடவைகளுக்கு மேல் தலைவராகவோ செயலாளராகவோ இருக்க முடியாது என கூட்டத்தில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இ.ஆனல்ட் 2016ஆம் ஆண்டிலிருந்து தலைவராகவும் அஜித்குமார் 2013ஆம் ஆண்டிலிருந்து செயலாளராகவும் செயற்பட்டு வரும் நிலையில் அவர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது என இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினரால் தெரிவிக்கப்பட்டது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் இவர்கள் போட்டியிட முடியாது எனக் கடிதம் அனுப்பியதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்காத இமானுவேல் ஆனல்ட் தரப்பு யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் சட்டப்படி தலைவருக்கு கால வரையறை இருக்கவில்லை என தெரிவித்தால் அங்கு முரண்பாடு தோன்றியது.

இதன்போது இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரதிநிதிகள் ஆனல்ட் மற்றும் அவர் தரப்பை சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உதைபந்தாட்ட சம்மேளனத்தினரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்மேளனத்தினர் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் இமானுவேல் ஆனல்ட் மீண்டும் தலைவராகவும் அஜித்குமார் மீண்டும் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

உதைபந்தாட்ட சம்மேளனத்தினர் தாக்கப்பட்டமைக்கு விளையாட்டு ஆர்வலர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் 05 வருடங்களுக்கு தடை செய்யப்படலாம் என இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

## அமைதியான...

எதிர்ப்பு தொடர்பான வன்முறைக் கும் பொறுப்புக் கூறவேண்டும்.

அதேநேரம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதில் குடியியல் சமூகத் தின் முக்கியப்பங்கை கோடிட்டுக் காட்டுவதாக இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, மலாவி, மொண்டி நீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கிய குழு தெரிவித்துள்ளது.

தண்டனை தவிர்ப்பு மற்றும் ஊழல்களுக்கு இலங்கை அதிகாரிகள் தீர்வு காணவேண்டும் என்றும் இந்த முக்கிய குழு வலியுறுத்தியுள் ளது.

இதற்கிடையில், கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்கும் அதேவேளையில், நெருக்கடியிலிருந்து வலுவாக வெளியே வருவதற்கு சீர்திருத்தங்கள் அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறி யுள்ளது. (அ)

## நிதி அமைச்சுக்கு...

திகதிக்கு முன்னர், வாக்குச்சீட்டு களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்க முடியாது எனவும் அரச அச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உரிய நேரத்தில் நிதி கிடைத்தால் 30 நாட்களுக்குள் வாக்குச்சீட்டுகள் முழுவதையும் அச்சடித்து வழங்க முடியும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வாக்குச்சீட்டு அச்சிடும் சரியான திகதியை 03 நாட்களுக்கு முன்னர் தெரிவிக்கும் பட்சத்திலேயே, பாதுகாப்பினை வழங்க முடியும் என அரச அச்சகத்துக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் 533 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அரச அச்சகம் கூறியுள்ளது. எனினும், 40 மில்லியன் ரூபாவே இதுவரை வழங் கப்பட்டுள்ளது. (அ)

## 4வருடங்கள்...

விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

அரசியல், பொருளாதார விவகாரங்கள் குறித்து அதிகம் உரையாடப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பாராளுமன்றக் குழுவின் சந்திப்பு குறித்து அரசியல் வட்டாரத்தில் மேலும் பல கதைகள் வெளிவந்தன. ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கருத்துக்கள் அவற்றுள் முக்கியமானவை.

"தேர்தல் நடந்தால் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தாது. பொருளாதாரத்தை பலப்படுத்தவேண்டும். இந்த நாட்டை மீட்க நான்கு வருடங்கள் எடுக்கும் என்று சிலர் தெரிவித்திருந்தனர். ஆனால், நான் எட்டு மாதத்தில் நிறையவே செய்துள்ளேன்" என இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதற்கேற்ப ரூபாய் மதிப்பு அதிகரிப்பது குறித்தும் அவர் உரையாடியுள்ளார். அடுத்த மாதம், தொடக்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும், அதன் மூலம் மக்கள் வரியை குறைத்து நிவாரணம் வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நிலவும் உறுதித்தன்மை தொடர்பில் அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி இவ்வாறு கருத்து வெளியிட்டார் என சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

"தற்போது பந்து எமது பக்கம் வந்துவிட்டால், துடுப்பாட்டம் செய்ய தயாராகுங்கள்" என்று ஜனாதிபதி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றினார் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன-என்றுள்ளது. (அ)

# பீரிஸுக்கு அழைப்பை எடுத்த பசில்!

கொழும்பு, மார்ச்.13

சுதந்திர மக்கள் கூட்டமைப்புடன் இணைந்து இயங்கும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தொலைபேசியில் அழைத்து உரையாடியுள்ளார் என கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

சுதந்திர மக்கள் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்க்கும் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் மிகவும் தனிப்பட்ட தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளது. இது ஒரு சிறப்பு உரையாடல் என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



இந்த உரையாடல் மிகவும் அன்பான தொலைபேசி உரையாடல் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

எவ்வாறாயினும், தொலைபேசி உரையாடலின் போது பேசப்பட்ட விடயங்கள் குறித்த குறிப்பிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தவணைப் பரீட்சைக்கு முன் வெளியாகின வினாத்தாள்கள்

கொழும்பு, மார்ச் 13

மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சைகள் இடம்பெறுவதற்கு முன்னர், வினாத்தாள்கள் வெளியாகியுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பௌத்தம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கான வினாத்தாள்களே வெளியாகியுள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாச குறிப்பிட்டார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

## தேர்தல் ஆணைக்குழு உறுப்புரிமைக்கு....

நிறைவேற்றும் நடவடிக்கைக்காக இந்த விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்புரிமைக்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு பல சிவில் அமைப்புகள்தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்புரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் தெரிவித்திருந்தார். (அ)

## தேர்தல்...

போதாது என நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

தேர்தலுக்கான பணம் வழங்கப் படாததன் காரணமாக கடந்த 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## மகிந்த...

பேரக்குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிட்ட மகிந்த தேசப்பிரிய மீண்டும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளார். மகிந்த தேசப்பிரிய வைத் தவிர, ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர் நிமல் புஞ்சிஹேவாவும் அதற்கான விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பித்துள்ளார். எவ்வாறாயினும், முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு அரசின் ஆதரவு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக மகிந்த தேசப்பிரிய கடந்த காலங்களில் பசில் மற்றும் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவராகவே கருதப்பட்டார். ஆனால், தற்போது மகிந்த தேசப்பிரிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமானவராகிவிட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. இதன்படி மகிந்த தேசப்பிரியவின் வரையறுக்கப்பட்ட அறிக்கையை கூடிய விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அதன் பின்னர் தேர்தலை இரத்துச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனையடுத்து அவர்களுக்கு நட்பாக புதிய தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது. (அ)

## ஏப்ரலில்...

இறக்குமதியில் கிடைக்கும் நிவாரணத்தை மக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விலைச் சூத்திரத்தின் படி, ஒவ்வொரு மாதமும் முதல் நாள் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள விலைத் திருத்தத்தில் எரிபொருள் விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் காஞ்சன குறிப்பிட்டார். (அ)

## உள்ளூராட்சி...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சட்ட மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கௌரவ அதிதியாகப் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகெங்கிலும் ஜனநாயகங்கள் தாழ்த்தப்பட்டிருக்கின்றன. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் எந்த ஜனநாயகமும் நிற்காது. நீங்கள் அனைவரும் அந்த விலைமதிப்பற்ற ஆட்சியின் பாதுகாவலர்கள்.

அன்றாட இலங்கையர்கள் தங்கள் கவலைகளை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதற்கும் அவர்களின் அரசாங்கத்தில் பங்கேற்பதற்கும் உள்ள உரிமைகளுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பது அசைக்க முடியாதது.

இலங்கையின் சுதந்திரமான தேர்தல்களின் பெருமைமிக்க வரலாறு அந்த உரிமைகளுக்கு அடிகோலுகிறது.

குடிமக்களுக்கு சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கத்துடன் நேரடியாக வாதிடும் சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் சுதந்திரமான நீதித்துறையில் தகுதியான சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கல் என்பன முக்கியமானவை. அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம், உள்ளூராட்சித் தேர்தல் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# புதனுக்குள் ரூ.500 மில்லியன் கிடைக்காவிடில் தபால் மூல வாக்களிப்புத் திகதியில் மாற்றம்!



கொழும்பு, மார்ச் 13

**திறைசேரி எதிர்வரும் புதன்கிழமைக்குள் 500 மில்லியன் ரூபாயை வழங்காவிட்டால் அஞ்சல் மூல வாக்குகளுக்கான புதிய திகதிகளை அறிவிக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக ஏப்ரல் 25 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அஞ்சல் மூல வாக்களிப்புக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை காலம் குறிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லை என அரசாங்க அச்சகப் பணிப்பாளர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார் .

இந்த சூழ்நிலையில் எதிர்வரும் புதன்கிழமைக்குள் தமது ஆணைக்குழு 500 மில்லியன் ரூபாவை முன் பணமாகப் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்த மாத இறுதிவரை திறைசேரியிலிருந்து மொத்தம் 1,100 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, மார்ச் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்குள் பணம் கிடைக்காவிட்டால், தாம் நீதி மன்றத்திற்குச் சென்று தமக்கான நிதியை திறைசேரி ஒதுக்கீடு செய் யாதமை குறித்து முறையிடவேண் டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார். (அ)

# 16 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 16 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இரு படகுகளில் எல்லை தாண்டிய மீனவர்களே நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர் என்றும் இவர்கள் நாகை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதில் காரைநகர் கடற்பரப்பில் நான்கு மீனவர்களும் பருத்தித்துறை கடற்பரப்பில் 12 மீனவர்களும் கைது செய்யப்பட்டதோடு அவர்களின் இரு படகும் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் மயிலிட்டித் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ-03)

# மனித உரிமை மீறல்களுடன் தொடர்புள்ள இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு!

கொழும்பு, மார்ச் 13

மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக் குழு, தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் மேற்கொள்ளப்படும் அநாவசியமான தலையீடுகள், நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் நிறைவேற்றதிகாரத்தின் பங்கு என்பன தொடர்பிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக் குழு தமது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் சிறிலங்கா தொடர்பான 6 ஆவது மீளாய்வுக் கூட்டத்தொடர் கடந்த 8 ஆம், 9 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெற்றது.

இதன்போது குறிப்பாக உள்நாட்டுப் போரின்போது இடம்பெயர்ந்தோரை மீள்குடியமர்த்துவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டிய மீளாய்வுக் குழு உறுப்பினர்கள், இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த 92 சதவீதமான காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமையையும் வரவேற்றனர்.

எனினும் போர்க்குற்றங்களும், மனிதகுலத்திற்கு எதிரான மீறல்களும் உள்நாட்டு சட்டத்தில் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா? என்று மனித உரிமைகள் மீளாய்வுக் குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் வினவினர். (அ)

# விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்ட மகிந்தானந்த!



கொழும்பு, மார்ச் 13

தாய்லாந்து செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மீண்டும் திருப்பியனுப்பப்பட் டுள்ளார்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக பயணத் தடை விதிக்கப்பட்டதால், அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படுத்தினார்.

தாய்லாந்தின் பாங்கொக் நோக்கிப் புறப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணிப்பதற்காக நேற்று அதிகாலை 1:00 மணியளவில் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக விதிக்கப்பட்ட பயணத்தடை உத்தரவு காரணமாக குடிவரவுத்துறை அதிகாரிகள் அவரை விமானத்தில் ஏற அனுமதி வழங்கவில்லை.

முன்னாள் அமைச்சருடன் அவரது மனைவியும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றார். அவர் பயணிக்க அனுமதிக்கப்பட்டபோதும், அமைச்சருடன் மீண்டும் தனது வீட்டுக்கு திரும்பினார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# இந்த மாதத்தின் முதல் 6 நாட்களுக்குள் 25,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு!

கொழும்பு, மார்ச் 13

இந்த மாதத்தின் முதல் 6 நாட்களுக்குள் சுமார் 25,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 8ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஜீவன பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 34 ஆயிரத்துக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இது 9.6 சதவீத அதிகரிப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் அடிப்படையில் இலங்கையின் முதல் மூன்று ஆதார சந்தைகளாக ரஷ்யா, இந்தியா மற்றும் ஜேர்மன் ஆகியன உள்ளன. (அ)

# 4 வருடங்களில் 8 தடவைகள் நாணய நிதிய உதவி கிட்டும்!



கொழும்பு, மார்ச் 13

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நான்கு வருடங்களில் 08 தடவைகளில் 03 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை பெறப்பட உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்மாத இறுதிக்குள் கடன் தொகைக்கான முதற்கட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அதனை பெற்றுக் கொள்தற்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதன் பின்னர் நிதி உதவி கிடைக்கும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்படும் ஒப்பந்தங்களின் பின்னர், இரண்டு தடவைகளில் உலக வங்கியிடமிருந்தும் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் இலங்கைக்கு உதவிகள் கிடைக்கும் - என்றார். (அ)

# சாவகச்சேரியில் வீடு இடிப்பு; பெண் உட்பட இருவர் கைது!

யாழ்ப்பாணம்,மார்ச் 13

சாவகச்சேரி பகுதியில் காணி ஒன்றின் வேலிகளை உடைத்தது, காணிக்குள் அத்துமீறி நுழைந்து வீடொன்றை இடித்து அழித்த பெண் உள்ளிட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் வீட்டை இடித்தழிக்கப் பயன்படுத்திய கனரக வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றினர்.



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள காணி ஒன்றில் உள்ள ஆட்கள் அற்ற வீட்டைச் சுற்றி தூண்கள் நடப்பட்டு முட்கம்பி வேலி அடைக்கப்பட்டு இருந்தது.

அந்த காணிக்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கனரக வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சென்ற பெண்ணொருவர் , வேலிகளை கனரக வாகனத்தால் பிடுங்கிவிட்டு காணிக்குள் இருந்த வீட்டைத் தரைமட்டமாக்கும் செயலில் ஈடுபட்டார்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் , காணிக்குள் அத்துமீறி நுழைந்த பெண்ணை கைது செய்ததுடன், கனரக வாகனச் சாரதியையும் கைது செய்தனர்.

இரு தரப்பினருக்கு இடையிலான காணிப்பிரச்னையே சம்பவத்துக்கு காரணம் என தமது ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் , அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.